# தென்றல்

காற்று : 02 சுகந்தம் : 01 (தை - பங்குனி) - 2009



50/-

தேசிய பல்சுவை குடும்ப சஞ்சிகை!

Life's Good LG

# Abans
## Show Room

LG, JVC, HAIER, HOOVER,ELECTROLUX,
TOYOSTAR, JAIPAN.....EXT


(சின்ன ஆஸ்பத்திரிக்கு முன்பாக)




குளிர்சாதனப்பெட்டி

தொலைக்காட்சிப் பெட்டி

சலவை இயந்திரம்



கணனி இயந்திரம்

மைக்ரோ வேவ்

குளிரூட்டி மற்றும்பல.....




**175, Trinco Road,**
**Batticaloa**
**T.P/Fax. 065-2226988**

# தென்றல்

THENDRAL

34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி,
மட்டக்களப்பு.
Tel:- 077-6983597

ஆசிரியர்
க. கிருபாகரன்

ஆசிரியர் குழு
டாக்டர். எம். கந்தசாமி
திருமதி. சிறிதேவி சங்கர்
திரு.கே. வாமதேவன்
திருமதி. கவிதா கிருபாகரன்
திரு. ஆ. அரசரெத்தினம்

ஓவியம்
சி. குகன்

கணனி வடிவமைப்பு
பிரின்டிங்
சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகம்
மட்டக்களப்பு.


## "தை பிறந்தால் வழி பிறக்கும்"

தமிழர் வாழ்வில் ''தை பிறந்தால் வழி பிறக்கும்'' எனும் பழமொழி காலங் காலமாக வழங்கி வருவதை நாம் கண் கூடாகக் காணலாம்.

இந்த வகையில் மலர்ந்திருக்கும் 2009 ஆம் ஆண்டு இலங்கை மக்கள் வாழ்வில் அமைதியையும், அன்பையும், வேண்டுவனவற்றை வழங்கும் ஆண்டாகவும் மலர வேண்டும் என்பதே அனைவரதும் எதிர் பார்ப்பாகும்.

இந்நிலையில் 2008 ஆம் ஆண்டு விடை பெறும் தவறு வாயிலே மட்டக்களப்பு மண்ணின் வரலாற்றில் புதியதொரு வரலாற்று நிகழ்வு அஸ்தமனமாயிருக்கிறது.

அது என்னவென்று உங்கள் மனம் முணுமுணுப்பது தெரிகிறது. விடயத்துக்கே வருகிறேன். ''அரச சாகித்திய மண்டல விருது பெற்ற எம் மண்ணின் மைந்தர்களான ஓ.கே. குணநாதன், கலாநிதி. செ.யோக ராஜா, எஸ். திமிலைத் துமிலன் மற்றும் கலாநிதி. ஆர். ருஷாந்தன் ஆகியோரை மட்டக்களப்பில் புத்தக நிலையம் நடத்துவதோடு மட்டும் நின்று விடாது இலக்கியப்பணியும் ஆற்றி வரும் ராஜாஸ் புத்தக அதிபர் நடராசா ஞானச்சந்திரன் பாராட்டி, ஆதரவளித்திருக்கும் செயற்பாட்டை எண்ணுகையில் மனம் பூரிப்படைகிறது.''

இவ்வாறான கலை உள்ளங்கள் மட்டக்களப்பில் இருப்பது ஆறுதல் தருகிறது.

இவரின் இவ் இலக்கிய முயற்சி தொடரவேண்டும். இதன் மூலம் எமது மண்ணில் புதுப்புது கலைஞர்களும், இலக்கிய வாதிகளும் தோன்றுவார்கள்.

அவர்கள் ஊடாக ஏனோ தானோ என்ற மனப் போக்கில் வாழும் கலைஞர்கள் புத்தெழிர்ச்சி பெறுவார்கள்.

இவ்வாறான காலகட்டத்திலே மலர்ந்திருக்கும் உங்கள் அபிமான தென்றலும் பல்வேறு விமர்சனங்களுக்கு மத்தியில் இன்று தனது 4வது இதழினூடாக உங்களுடன் சங்கமிக்கிறது.

எனவே ராஜாஸ் நிலைய அதிபர் போன்ற விற்பனை நிலைய அதிபர்கள் இலக்கிய இதழ்கள் வெளிவருவதில் உள்ள கஸ்டங்களை உணர்ந்து ஆவன புரிய வேண்டும் என '' தென்றல்" வேண்டி நிற்கின்றது.

என்றென்றும்
அன்புடன்
ஆசிரியர்.


## "தென்றல்" கட்டண விபரம் (அஞ்சல் செலவு உட்பட)

| | இலங்கை | வெளிநாடு |
|---|---|---|
| ஓராண்டுக் கட்டணம் | 220/= | US$ 10 |
| ஆயுள் கட்டணம் | 1000/= | US$ 50 |

ஆயுள் கட்டணம் செலுத்துவோருக்கு வாழ்நாள் முழுவதும் "தென்றல்" இலவசமாக வழங்கப்படும்.

**விளம்பரக் கட்டணம்**

| | முழுமை | அரை |
|---|---|---|
| பின் அட்டை வெளிப்புறம் | 3000/= | 2000/= |
| முன்அட்டை உட்புறம் | 2000/= | 1750/= |
| பின்அட்டை உட்புறம் | 1500/= | 1000/= |
| உட்பகுதிகள் | 1000/= | 750/= |

**அன்பளிப்பு**

அன்பளிப்புச் செய்ய விரும்பும் நலன்விரும்பிகள் தாங்கள் விரும்பும் தொகையைஆசிரியரிடம் வழங்கலாம்.

வங்கி :- மக்கள் வங்கி (நகரக்கிளை) மட்டக்களப்பு.
கணக்கு இல:- 113100170002181
(நடைமுறைக் கணக்கு)
காசுக்கட்டளை :- அஞ்சல் அலுவலகம், மட்டக்களப்பு.

தமிழ் இலக்கியத்தில் நவீனத்துவம் என்னும் கருத்தியல் களம் மகாகவி பாரதியின் படைப்புக்கள் முதல் செல்வாக்கடைந்து வந்துள்ளது. தமிழகத்தினதும், ஈழத்தினதும் தமிழ் இலக்கிய தடங்களில் நவீனத் தமிழ் இலக்கிய நிலைகள் வெவ்வேறு வடிவங்களில் கூறப்பட்டுச் சென்றுள்ள மையையும் நோக்க முடியும். ஈழத்து நவீன தமிழிலக்கியத் தடத்திலே முற்போக்கு வாத இலக்கியப்பாதை

# மீள் வாசிப்பில் நவீனத் தமிழ் இலக்கியம்

ஈழத்து நவீன தமிழிலக்கியப் பாதையை திறந்து விட்டிருந்தது எனக் கருதமுடிகிறது. 20ம் நூற்றாண்டின் அரைப்பகுதியில் இருந்து ஈழத்து நவீன இலக்கிய பதிவுகள் ஆங்காங்கு பொறிக்கப்பட்டு வந்துள்ளன.

ஈழத்து நவீன இலக்கிய பதிவுகளைப் பொறுத்தவரை உருவ அமைப்பிலும் உள்ளடக்க நெறியிலும் நவீனத்துவ படைப்புக்கள் முளைவிடத் தொடங்குவது காணற்பாலது. பாரதி (1882) பிறப்பினைத் தொடர்ந்து இந்து மறுமலர்ச்சியுடன் தொடர்பாக உரைநடை இலக்கியங்கள் பரிணமித்தன அக்காலத்தில் நாவல்களின் தோற்றம் இதற்கு சான்று. தமிழில் செய்யுள் இலக்கியம் மரபுவழிப்பட்டதாயினும் உரைநடை இலக்கிய வடிவங்கள் மேலைத்தேய கலாசாரத்தின் அறிமுகத்தோடே செல்வாக்கு பெறுகின்ற தென்றும் குறிப்பிடமுடியும்.

நவீனம் என்னும் சொற்றொடர் புதுமை, மறுமலர்ச்சி, என்னும் கருத்துக்களுடன் கூடியது. இலக்கிய வடிவங்கள் பழமையானவை. தமிழில் செய்யுள் இலக்கியம் மரபுவழிப்பட்டதாயினும் பாடுபொருளில் ஏற்பட்ட புதுமை மாற்றங்களே நவீன இலக்கிய கொள்கைக்கு காரணமாயின. எனவே இலக்கிய உத்தி, உள்ளடக்க கருத்தியல்களே நவீன இலக்கியக்கட்டமைப்புக்கு காரணமாயிற்றெனலாம்.

நவீன இலக்கிய கருத்தியல் வளர்ச்சிக்குப் பல்வேறு கலை, சமூதாய பின்னணிகள் காரணமாக இருந்திருக்கின்றன. 1945 களைத் தொடர்ந்து ஏற்பட்ட சுதந்திர உணர்வு, கல்வி மறுமலர்ச்சி, புதிய புலமையாளர்களின், எழுச்சி, வாசிப்பு நிலைப்பட்ட ஓர் வாசகர் கூட்டம், தகவல் தொழில்நுட்ப ஆரம்பமாக பத்திரிகை தொழிலின் தொடக்கம், முயற்சியாளர் வர்க்க எழுச்சி, பெண்ணுரிமை எழுச்சி, மரபுவழியான சாதி, மதக் கோட்பாடுகளின் உடைவு, மனித உரிமை பற்றிய போராட்டங்கள், மரபுவழிக்கலைகள், ஜனரஞ்சக கலைகளாக மாற்றமடைந்தமை, தனித்தமிழ் உணர்வு, இந்து தத்துவ எழுச்சி,

பொதுவுடமைக் கட்சிகளின் தோற்றம் முதலிய பின்னணிகள் இலக்கிய பொருள் கொள்முறையிலே மாற்றத்தை ஏற்படுத்தின. நவீன இலக்கிய வடிவ எழுச்சியின் ஆரம்ப கட்டநிலையாக இவற்றைக் குறிப்பிடலாம்.

மேலைத்தேய பண்பாட்டில் இருந்து விடுதலை பெறும் வேட்கையின் விளைவுகள் நவீனத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஊன்று கோலாயின. நிலவுடமை உடைந்து கல்விகற்றோரின் சமூக எழுச்சி பல்வேறு வடிவங்களில் ஏற்படும் நிலை உண்டாயிற்று. தென்னிந்திய நலவுரிமைக்கழகம் (1915), பிராமண ரல்லாதார் இயக்கம் (1916) ஆகியன எழுச்சி பெற்றமையால் அதிகாரத்துக்குள் அடங்கிப் போய்க்கிடந்த அடிமட்ட மக்கள் முன்னெடுக்கத் தொடங்கினர். இலக்கிய கருப் பொருளிலும் அவர்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இவையும் நவீன தமிழிலக்கிய எழுச்சியின் பின்னணிகளாக அமைந்திருந்தன.

இலக்கிய உருவாக்கத்திலும் இலக்கிய உள்ளடக்கத்திலும் அடிமட்ட மக்களுக்கு முதன்மை வழங்கப்பட்டது என்பது வேறொரு கருத்தையும் தந்துவிடுகிறது. அதாவது இலக்கியம் மேல் மட்ட மக்களிடம் இருந்து விடுபடத் தொடங்கியது என்னும் கருத்தும் குறிப்பிடத்தக்கதாம். அவ்வாறு நோக்குகையில் சமூகத்தின் கூடுதலான பிரிவினரைப் பற்றிய கவனம் இலக்கியத்திற்குள் புகுந்து கொண்டது எனக் குறிப்பிடலாம். பிரசார நோக்கு, நிறுவனமயமாக்கம் முதலிய கருத்தியல் சாயலிலும் படைப்பிலக்கியம் மாற்றமடையத் தொடங்கியது. இந்த மாற்றமும் நவீன இலக்கியத்தளத்தில். இலக்கிய ஆற்றலுக்கு வலுக்கொடுத்தது எனவும் குறிப்பிடலாம்.

நவீன தமிழிலக்கியப் போக்குகள் காலங்காலமாக பரிணமித்து வந்துள்ளமையை நோக்கமுடியும். சங்க இலக்கியம் தொடக்கம் சமகால கவிதைகள் வரை இத்தகைய புதிய முயற்சிகளை நோக்கமுடிகிறது. மணிப் பிறவாள உரைநடை முதல் சமகால குறுநாவல் வரையும் இத்தகைய மாற்றங்களையும் நோக்கலாம். இவ்வாறு அவதானிக்கையில் நவீன தமிழ் இலக்கியம் என்பது ஒரு தொடர்ச்சியான ஓட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நவீன தமிழ் இலக்கியப் போக்கில் முன்னைய இலக்கியங்கள் அவ்விலக்கியங்கள் எழுகின்ற சமூகச் சூழல், படைப்பாளிகள் ஆகிய மூன்று அம்சங்களுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கும்.

இலக்கியங்கள் எழுகின்ற சமூகச் சூழலில் தனிமனிதவாதம், தனித்து வமடையும் தனிமனிதன் எத்தகைய உள நெருக்குதலுக்கு உட்படுகிறான் என்பது இதன் மற்றுமொரு கருத்தெனலாம். அத்தகைய உள நெருக்கடிகளை உள்வாங்காத இலக்கியம் நவீன படைப்பாக கருதமுடியாது. இத்தகைய உள நெருக்கடிகள் படைப்பாளிகளினாலும் விளங்கிக் கொள்ள வேண்டிய

ஒன்றாகும்.

விடுதலை நோக்கினை தளமாக கொண்ட சூழலில் படைக்கப்பட்ட இலக்கியங்களைக் காட்டிலும் விடுதலைக்குப் பின் எழுந்த தமிழிலக்கியப் போக்குகள் காரசாரமான பார்வைக்கு உட்படுத்தப்படுவதை நோக்கலாம். காந்திய கொள்கை தழுவிய படைப்புக்கள் இதில் அடங்கும். வேற்று மொழி எதிர்ப்பு, பொதுவுடமை, பிராமணிய எதிர்ப்பு நிலை முன்வைக்கப்பட்டது. அத்துடன் தமிழ்ச்சூழலில் ஏற்பட்ட அரசியல் அதிகாரம், வறுமை, ஊழல்கள் என்பன தோன்றிய வேளையில் இவற்றை போக்குமளவிற்கும் காந்திய கொள்கையுடைய இலக்கியப்படைப்புக்கள் அமையாமையும் அறியப்படுகின்றது. அகிம்சை வழிப் படைப்புக்கள் எழுந்தமையைத் தொடர்ந்து சமுதாய நெறிகளைத் தொடும் படைப்புக்களும் எழுச்சி பெறத் தொடங்கின. சமுதாய நெறிகளைத் தொடும் இலக்கியப்படைப்புக்கள் பெரியாரின் சிந்தனையின் விளைவால் ஏற்பட்டனவாகும். டாக்டர் மு. வரதராசன் போன்றோரது படைப் புக்கள் இந்த வரிசையில் அடங்கக்கூடியவை. இவ்வேளைகளிலேயே நவீன தமிழிலக்கியப்பரப்பிலே நாடகப் படைப்புகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப் பட்டது. அண்ணாத்துரையின் நாடகங்கள் இதில் முக்கியத்துவம் பெறலாயின. எனவே பெரியாரின் இலக்கியப்படைப்புக்கள் ஆதிக்க சக்தியை உடைத்து சமூகப் பாங்கான இலக்கியப்படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது எனலாம்.

சமூகப் பாங்கான இலக்கியப் படைப்புக்கள் கலாசார ரீதியான படைப்புக்களாகவே காணப்படுகின்றன. அதேவேளை சமூக அமைப்பினை நெறிப்படுத்தும் ஊடகமாகவே இலக்கியத்தை நோக்க முடிந்தது. நவீன இலக்கியப்பார்வையின் முகிழ்ப்பு நிலை இவ்வாறிருக்க மெய்யியல் வரலாற்றில் இறுதியாக உதயமாகிய பகுப்பாய்வு மெய்யியல் கொள்ளையுடனும் இலக்கியக் கருத்துக்கள் தொடர்பு பட்டிருப்பதனையும் நோக்க முடிகிறது. இலக்கிய கலாசார ஆய்வினையும் அதன் அமைப்பு முறை ஆய்வினையும் அதனோடு தொடர்பான பண்பாட்டு ஆய்வினையும் இழுத்துச் செல்கிறது எனக் கூறுகையில் பகுப்பாய்வு இலக்கிய வகைமை ஒன்றை நோக்கும் அவசியம் எழுந்து விடுகிறது. அத்தகைய நோக்கிலேயே இலக்கியங்களை பயன்படுத்த வேண்டிய தேவையும் அண்மைக் காலத்திலே உருவாகி விட்டிருப்பதனையும் காண்கின்றோம்.

''பெ. பேரின்பராசா''

அப்போது மாலை 5.30 மணி. சுகந்தி பஸ்சிலிருந்து இறங்கி, வீட்டை நோக்கி விரைந்து நடந்தாள். அவளது உள்ளம் சந்தோசத்தில் துள்ளிக குதித்தது. அதன் பிரதிபலிப்பு, அவளது நடையின் வேகத்தைக் கூட்டியது. மனதில் ஆர்வமான எண்ணங்கள் மீண்டும் மீண்டும் வந்து அவளை சீக்கிரம், சீக்கிரம் போ என்று உந்தித் தள்ளியது. எத்தனை வருடங்கள் காத்திருந்தாள் ஒன்றல்ல, இரண்டல்ல, மொத்தம் ஐந்து வருடங்கள் அல்லவா. பாசத்தின் பிரிவு மனம் தாங்குமா? அந்தப் பிரிவு அத்தனையும் ஒன்றாக கலந்து இன்று சந்தோசமாக மாறும் போது எப்படி அவளால் ஜீரணிக்கமுடியும்

அந்த அன்பை, பாசத்தை, ஆர்வத்தை எப்படி அவளால் தள்ளிப் போட முடியும். இன்நேரம் வீட்டுக்கு வந்திருப்பார். எண்ணிக் கொண்டே கைக் கடிகாரத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தாள் சுகந்தி.

இந்தக் காலகட்டத்தில் குடும்ப சுமையா? ஐயோ எப்படி சுமப்பது. எப்படி உழைப்பது. நமக்கு ஏன் இந்த வீண் வேலை. அவரவர் அவரவரோட வாழ்க்கையை பொறுப்பா பார்த்துக்கணும். இதுல அவங்க சுமையை நான் சுமந்தால் என் வாழ்க்கை எப்படி போவது. உழைப்பது முழுவதையும் குடும்பத்தாருக்கே கொட்டினால் அப்புறம் என் வாழ்க்கைக்கு யார் உழைப்பது. இளமையும், உடல் தைரியமும் அறுபது வயதிலும் வருமா? சீச்சீ... என்னால் முடியாது.

# என் அண்ணா!

இப்படித்தான் சில பேர் வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதில் அவர்களை பெற்றவர்கள் பொறுப்பில்லாமல் வாழ்ந்து பிள்ளைகளின் மேல் குடும்பத்தின் பாரத்தை சுமத்துவது பிழை என்று சொல்வதா? அல்லது நாட்டில் ஏறிக் கொண்டே இருக்கும் பொருட்களின் விலை வாசியால் குடும்பத்தில் இருவர் உழைத்தும் குடும்பத்து செலவுகளை முற்றுமுழுதாக தீர்க்க முடியாமல் அல்லல்படும் நிலையை குறை சொல்வதா? அல்லது பெற்றோரின் உழைப்பு முழுவதையும் முழுதாக முழுங்கி ஒரு நல்ல நிலைக்கு வந்ததும், அந்தப் பெற்றோரை அம்போ என்று விட்டு விட்டுப் போகும் இளம் பராயத்தின் மீது குறை சொல்வதா? இது எல்லாவற்றையும் தாண்டி இப்படி குடும்பத்திற்காக வாழ்க்கையை 26 வயதிலும் தியாக உழைப்புடன் வாழும் அந்தஜீவனை என்னவென்று சொல்வது.

இப்படியே சிந்தித்து கொண்டே வீட்டை அடைந்தாள் சுகந்தி. வீட்டிலே பேச்சுக் குரல்கள் கேட்டன. அக்கம் பக்கத்து வீட்டுக் காரர்கள் வருவதும்

போவதுமாக இருக்க அவள் மனம் ஊர்ஜிதப்படுத்தியது. ஆமாம் சந்தேகமே இல்லை. சவூதி அரேபியாவிலிருந்து அவர் வந்து விட்டார். வீட்டிற்குள் நுழையும் முன்னரே வாசனைத் திரவியம் மூக்கைத்துளைக்க ஆர்வத்துடன் அவளது கண்கள் அந்த ஜீவனைத் தேடியது. அவளது கண்கள் தேடியதை கண்டு கொண்டன. தன் எதிரே ஆஜானுபாகுவாக நின்று பாசத்துடன் தன்னை நோக்கி புன்னகைக்கும் அந்த ஜீவனை பாய்ந்து தழுவிக் கொண்டாள் சுகந்தி.

அ.......ண்......ணா....... என்று வாய் விட்டுச் சொன்னாள். ஆ...... என்தங்கை சுகந்தியா இது.... அம்மாடியோ... என்னாம் பெரிய குமரியாகிட்டாய்.... ஆச்சரியத்துடனும், பாசத்துடனும் அன்புத் தங்கையை அணைத்துக் கொண்டான் அண்ணன் வசந்தன்.

ஆமாம் அண்ணா உங்களையும் தான் மதிக்க முடியமலுள்ளது. ஆளே மாறிட்டிங்க... ஆனா அந்த அன்பு முகம் மட்டும் மாறல்ல.... என்றாள்.... கண்ணீர் ததும்ப... ஆமாம் வேலைக்கெல்லாம் போறியாமே அம்மா சொன்னா..... அண்ணன் வினவ ஆமாம் அண்ணா..... AL றிசல்ட் வரும் வரை எஞ்சியோ ஒன்றில் டெம்றறியா வேலை செய்யிறேன். மாதம் எட்டாயிரம் தர்றாங்க. அதுல வேலை நேரம் போக மீதி நேரம் படிப்புக்காக செலவு செய்யிறேன். நீ சொல்றதை கேட்டால் எனக்கு பெருமையா இருக்கும்மா. ஆனால் ஆம்பளை இல்லாத வீடு. பொம்பளப் புள்ள நீ வேலை அது, இது என்று மூத்த சகோதரன் வசந்தன் பேச, முந்திரிக் கொட்டை போல் இளைய தங்கை சோபா முந்திக் கொண்டு என்னண்ணா சொல்றீங்க அக்கா முன்னம் போல பயந்தாங் கோழி அல்ல நல்லா மாறிட்டாள் என்றாள். சோபா போடி என்றாள் சிறு கோபமாக தமக்கை....சரிசரி.... ரெண்டுபேரும் இப்படி வளர்ந்திருப்பிங்க என்று நான் எதிர் பார்க்கல்ல அண்ணா வசந்தன் வாய் விட்டுச் சிரித்தான்.

மூன்று பிள்ளைகளின், பாசப் பிணைப்புகளையும், கேலிப் பேச்சுக்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு மதிய சமையலுக்காக பயற்றங்காயை உடைத்துக் கொண்டிருந்த தாய் வசந்தியின் மனம் மிகிழ்ந்திருந்தாலும், அவளது தாயுள்ளம் மகனை எண்ணி



கவலைப்பட்டது. சிந்தனையில் ஆழ்ந்தாள் வசந்தி. இளம் வயதிலே மாநிறமும் அழகும் கொண்ட வசந்திக்குதாய் மாமா ராசா தாய்க்கு ஒரே ஒரு பிள்ளையாம். தோட்டமாமா துரவாம் என்று எங்கிருந்தோ ஒருத்தனை அழைத்து வந்து மாப்பிள்ளையாக்கி துரையை வசந்தியின் தலையில் கட்டினார்கள். வாழ்க்கை நன்றாக ஓடும் என்று எதிர்பார்த்துத் தான் வசந்தி துரைக்கு கழுத்தை நீட்டினாள. மாமா ராசா சொன்னது போல் துரை தாய்க்கு ஒரு மகன்

## சிறுகதை



தான். ஆனால் தோட்டம் துரவு இது எல்லாம் கட்டுக் கதை என்றும், துரை மது போதைக்கு அடிமையானவன் என்றும் ஒரு கிளாஸ் மதுவுக்காக மற்றவர்கள் எதைச் சொன்னாலும் செய்வான் என்றும் போகப்போகத்தான் அவளுக்குப் புரிந்தது.

என்ன செய்வது திருமணம் என்னும் பந்தத்தில் இணைந்து வாழ்க்கையை தொலைத்துவிட்டோம். தொலைத்ததை தேடி பிரயோசன மில்லை என்பதை உணர்ந்தவளாய் கணவனை அன்பாகத் திருத்த முயன்று தோற்றுப் போனாள். இப்படியாக காலம் உருண்டு ஓடி மூத்த மகன் வசந்தன் பிறக்க, அதன் பின்னால் சுகந்தி, பின்னர் சோவா, இப்படி மூன்று பிள்ளைகளுக்கு தகப்பனாகியும் குடும்பப் பொறுப்பு சிறிதுமில்லாது துரை அவன் போக்கிலே வாழ்ந்தான்.

எத்தனை எடுத்துச் சொல்லியும் அவன் கேட்டபாடில்லை. நாட்கள் உருண்டு ஓடின. வசந்தன் 9ம் வகுப்புமுடிந்து 10ம் வகுப்பு படிக்கும் போது வாரத்தில் நான்கு நாட்கள் பாடசாலையும், மீதி

மூன்று நாட்கள் மேசன்மாருடன் கூலி வேலைக்கும், பஸ் தரிப்பிடங்களில் ஆரம்ப அரிச்சுவடி புத்தகங்களையும், திண் பண்டங்களையும் ஒவ்வொரு பஸ்சாக ஏறி இறங்கி விற்றுவிட்டு வருவான். மதியம் உணவுக்காக வீட்டுக்கு வந்தால் தொழில் பட்டு விடும் என்பதால் பக்கத்தில் இருக்கும் கடையில் டீயும் ஒரு பண்ணும் வாங்கிச் சாப்பிட்டு காலத்தைக் கடத்தினான்.

அவன் நிம்மதியாக வயிறார உணவு உண்பது இரவில் தான். இப்படி மகன் உழைக்கும் போது துரை மகனை அடிக்கடி கடிந்து கொள்வான். டேய் வசந்தா வாடா பெற்ற தகப்பனாயிற்றே என்று மகன் மரியாதையுடன் முன்னே சென்று நிற்பான். பெரிய உழைப்பாளியோ வீட்டுல ஆளையோ பார்க்க முடியல்ல சரி எவ்வளவு இன்றைக்கு உழைச்சே வீடிப் புகையை புக்குப் புக்கு என விட்டபடி கேட்பான் துரை. அது... அதுப்பா... முன்னூறு ரூபாய் என்பான் திக்கித்தடுமாறி, அதுல 100ரூபா தா என்பான் அதிகாரமாக துரை, அப்பா... அதுப்பா, நாளைக்கு விற்கிறதுக்கு சாமான் வாங்கணும் அவன் முடிக்கும் முன்னரே அவனது கன்னத்தில் பாராரென அறைந்து விடுவான் தகப்பன்.

வசந்தி ஓடிவந்து உழைக்கத் தான் உங்களுக்கு முடியல்ல. உழைக் கிற பிள்ளையை ஏன் இப்படி அடிக் கிறியள். துரை கோபமாக வசந்தியை யும் அடித்து விட்டு, வசந்தனிடம் காசையும் பிடிங்கிக் கொண்டு, நன்றாகக் குடித்து விட்டு, வீட்டுக்கு வந்து மனைவியை அடிப்பான். தடுக்கும் மகனையும் அடிப்பான். இப்படியே அவர்களது வாழ்க்கை ஓடியது.

துரையின் அடாவடித்தனமும் வீட்டில் அதிகமாகியது, அவனுக்கு வேறு ஒரு ஊரில் வேறு ஒரு பெண்ணோடு உறவு ஏற்பட்டு திரு மணமும் செய்து குடும்பத்தை அம்போ என்று விட்டு விட்டுப் போய் விட்டான். வசந்தி கலங்கிப் போனாள். மகன் வசந்தன் 12ம் வகுப்புவரை படித்து, பரீட்சை எடுக்காமல் படிப்பை நிற் பாட்டி விட்டு உழைப்பதிலும், தங்கை மாரான சுகந்தி, சோபா இருவரையும் படித்து பெரியவர்களாக்க வேணும் என்பதிலும் முக்கியமாக தனக்கு பாராயம் தெரியும் காலத்தில் இருந்து அம்மா பட்ட துன்பங்களை இனியும் படக் கூடாது. அம்மாவிற்கு ஆறு தலாக இருக்க வேண்டும் என்பதற் காகவும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தான். சிறுக சிறுக சேர்த்து சவூதி அரேபியாவிற்கு பயணமானான்.

5 வருடங்களின் பின் மீண்டும் வீட்டுக்கு வந்திருக்கிறான். வசந்தியின் அருமை மகன் வசந்தன், அம்மா.. என்ற மகனின் குரல் கேட்டு சிந்தனையில் இருந்து பெருமூச்சு ஒன்றை விட்டபடி மகனை பெரு

மிதமாகப் பார்த்தாள் தாய். என்ன இது எவ்வளவு நேரமா? பயத்தங்காய் உடைப்பீர்கள். சீக்கிரமா பண்ணுங் கம்மா பசிக்குது. அங்கே கோழி கோழியாக சாப்பிட்டு நாக்கு அலுத்தே போனது என்றான். மெய்தானா மகனே அப்போ அங்க மீன், மரக்கறி எனக் கேட்டுக் கொண்டு அடுப்படியை நோக்கிச் செல்லும் தாயின் பின்னே.... அங்கே வெள்ளிக் கிழமைதான் எங்களுக்கு லீவும்மா. அப்போ நாங்க எல்லாரும். என்று வெளிநாட்டுக் கதைகளை தாயிடம் கூறிக் கொண்டே குத்தி மீது அமர்ந்தான் வசந்தன்.

தாயும் ஆ.....ம்.....என வினவியபடியே இருக்க மகிழ்ச்சியாக, அண்ணா கொண்டு வந்த சமான்களை பிரித்துப் பார்த்தார்கள் தங்கைமார் இருவரும்.

-திருமதி. சிறிதேவி. சங்கர்-


## மட்டுமா நகரில் ....

சகல விதமான மருந்து வகைகள், உணவு வகைகள்,
சிறு பிள்ளைகளுக்குத் தேவையான பால்மா வகைகள்,
மற்றும் ஏனைய அத்தியாவசிய பொருட்கள்
என்பனவற்றை நீங்கள் ஒரே கூரையின் கீழ் தெரிவு
செய்து கொள்ள விஜயம் செய்ய வேண்டிய ஒரே இடம்

**+ New Batticaloa Medical's +**

No. 18, Bar Road,
BATTICALOA.

Tel : 065 - 2224400
Fax : 065- 2223515

AD/0005

# ஆலயங்கள் நிறைந்த ஆரையம்பதி ஒரு பழம்பதி

ஆரைப்பற்றை என வழங்கி தற்போது ஆரையம்பதி என அழைக்கப்படும் இக்கிராமம் ஒரு பழம்பதியாகும். இதன் பழமைக்கு ஆதாரமாக இரண்டு சான்றுகளைக் கூறலாம்.

ஒன்று உலக நாச்சியாரால் அமைக்கப்பட்ட கோபுரத்துடன் கூடிய ஆலயம். போத்துக்கேயரால் அழிக்கப் பட்ட பின், அவ்விடத்தை மக்கள் சிகரம் என அழைத்தமை.

இரண்டு - கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வர ஆலயத்துக்கு ஆரையம்பதி கந்த சுவாமி கோயிலி ருந்து, தேரோட்டத்துக்கான வடக் கயிறு எடுத்துச் செல்லப்படுவது.

''ஆரைப்பற்றை'' என்ற பெயர் வரக்காரணம் யாது? அந்தக் காலத் தில் ஆரைச்செடி நிறைந்த இடமாக இக்கிராமம் இருந்திருக்கலாம். ஆரைச் செடிபற்றி அநேகர் அறிந்தி ருக்க மாட்டார்கள். நீர்க்கரை ஓரங் களில் ஆறு அங்குலம் உயராமான ஒற்றைத் தண்டில் நான்கு இலைக ளைக் கொண்ட ஒரு மென்மையான செடி அது. இப்போது அதை ஆரையப் பற்றைக் கிராமத்தில் காணமுடியாது.

இச்செடி பற்றிய பழம்பாடல் ஒன்று உண்டு. இது ஒரு கற்பனைக் கதை:- கம்பரும், ஔவையாரும் ஒன்றாகப் போய்க்கொண்டிருக்கும் போது இச் செடியைக் கண்ட கம்பர் கிண்டலாக:- **''ஒரு காலில் நாலிலைப் பந்தலடி''** என்றாராம். அவரை மட்டம் தட்ட எண்ணிய ஔவையார் பின்வருமாறு பாடினாராம்:- **''எட்டே கால லட்சணமே எமனேறும் பரியே மட்டில் பெரி யம்மை வாகனமே, முட்ட மேல் கூரையில்லா வீடே, குலராமன் தூதுவனே ஆரையடா சொன்னாய் அடி''**

ஆரைச்செடிக்கு இப்படி யொரு இலக்கியப் பெருமை. அத்தகைய ஆரைச் செடிகள் நிறைந்தது ''ஆரைப்பற்றை'' எனப்பெயர் பெற்ற இக்கிராமம் அந்த இலக்கியப் பெருமையை இழந்து இன்று ஆரையம் பதியாகிவிட்டது.

**தனித்துவங்கள்:-** இக்கிராமத்தின் தனித்துவம் சில உள. அக்காலத்தில் இக்கிராமமும் ஒரு துறையாக விளங் கியது. மட்டக்களப்பு வாவியோரமாக ஆலடித்துறை என்ற பெயரில் ஒரு துறை உள்ளது. இங்கு வெளி இடங்களிலிருந்து வத்தைகளில் உணவுப் பண்டங்கள் கொண்டு வரப்பட்டு, கரையோரத்தில் இருந்த ''கிட்டங்கி'' என்னும் களஞ்சியசாலை யில் இப் பண்டங்கள் சேமித்து வைக்கப் பட்டனவாம். அவ்விடம் இப்போதும் ''**கிட்டங்கி**'' என அழைக்கப்படுகின்றது.

இவ்வூர் மக்கள் பயபக்தி மிகுந்த வர்கள். சுமார் 25 ஆலயங்கள் இங்கு உள்ளன. அவற்றுள் முருகன் ஆலயமும், கண்ணகி ஆலயமும் மிகவும் பிரசித்தமானவை. முருக வணக்கமும், கண்ணகி வணக்கமும் நீண்ட காலமாக இங்கு வேரூன்றி யுள்ளது.

ஒரு காலத்தில் மீன்பிடிக்கிரமமாக

விளங்கிய இக்கிராமம் இன்றுகல்விக் கிராமமாக மாறியுள்ளது. அரச சேவையிலும், பிற துறைகளிலும் மிக முக்கியமானபதவிகளை வகித்த வர்கள். வகிப்பவர்கள் இங்கு உள்ளனர்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர் ஆரையம்பதியைச் சேர்ந்த த. தங்கவடிவேல் என்பது யாவரும் அறிந்த செய்தி.

இக்கிராமத்திலிருந்து ஏராள மானோர் வெளிநாடு சென்றுள்ளனர். அவர்கள் வீடுகள் இப்போது மாடி வீடுகளாக மாறியுள்ளன. தற்போது டொக்டர்களாகவும், என்ஜினியர்களா கவும், நிர்வாகசேவை உத்தியோ கத்தர்களாகவும் பலர் கடமை ஆற்று கின்றனர். இக்கிராமத்தில் ஆசிரியர் கள் மிகுதியாக உள்ளனர். ஆனால் அவர்களது பிள்ளைகள் வேறு தொழில துறைகளில் சேர்ந்து ஏற்றம் பெற்றுள் ளனர்.

## கலைகலாசாரம்

இந்துக்கலை கலாசாரத்தில் ஊறித் திளைத்த இக்கிராமத்தில் நூறு வருடங்களுக்கு மேலாக நாடகம், கூத்து, கிராமியக்கலைகள் முதலியன போஷிக்கப்பட்டுள்ளன. கூத்துக் களில் பவளேந்திரி, அலங்கார ரூபன் முதலிய கூத்துக்கள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இவைகளுக்குப் பின் கவிஞர் முனாக்கானா லட்சுமி கல் யாணம், பரிகாரிமகன் முதலிய கூத்துக்கள் அரங்கேற்றினார்.

நாடகத்தைப்பொறுத்தவரை இது ஒரு முன்னோடிக் கிராமமாகும். இங்கு வாழ்ந்த சங்கீத மாஸ்டர் கந்தையா விலாச நாடக பாணியில் பல நாடகங் களைப் பழக்கி மேடையேற்றி யுள்ளார். அல்லி அர்ஜுனா, பவளக் கொடி, துருவன் முதலிய நாடகங்கள் மிகவும், பிரசித்தி பெற்றவை.

கந்தையா மாஸ்ரருக்குப்பின் அவ்வப்போது, சினிமா பாணியில் சில நாடகங்கள் மேடை ஏறியுள்ளன. தூக்குமேடை, அந்தமான் காதலி, நாம் (வேறுபெயரியில்) முதலிய வற்றுடன் எஸ். பொ. வின் முதல் முழக்கம், ஆரையூர் அமரனின் ''மட்டக்களப்பு மன்னன்'' அன்பு மணியின் சூழ்ச்சிவலை, திரைகல் தீபம் ( மட். நகர மண்டபத்தில்) மேடையேறியுள்ளன.

ஆனாலும், கந்தையா மாஸ்ரருக் குப்பின் பல்வேறு நாடகங்களை எழுதித் தயாரித்து மேடையேற்றிய பெருமை ஆரையூர் இளவல் என்ப வரையே சாரும். ஆரையம்பதியில் மட்டு மல்லாது, மட்டக்களப்பு, வாழைச் சேனை, முதலிய பற்பல கிராமங்க ளிலும், இவரது நாடகங்கள் மேடை யேறியுள்ளன. வரலாற்று நாடகங்கள் இதிகாச நாடகங்கள், சமூக நாடகங் கள் என 80 நாடகங்கள் வரை இவர் எழுதித் தயாரித்து மேடை யேற்றி யுள்ளார். ''நீறுபூத்த நெருப்பு'' என்ற நாடகத்தொகுதி நூலை வெளி யிட்டவர்.

ஐ. சிவசுந்தரம் என்பவரும் முக்கி யமான ஒரு நாடகாசிரியர். இவரது தாது கோபுரம் முதலிய நாடகங்கள் கொழும்பிலும் மேடை ஏறி உள்ளன.

நாடகத்தைப் போலவே இசை நிகழ்ச்சிகளிலும் இக்கிராமம் புகழ் பெற்றது. ஒரு காலத்தில் இலங் கேஸ்வரன் இசைக்குழு (ஆரையம்பதி)

கொடிகட்டிப் பறந்ததை யாரும் மறந்தி ருக்க முடியாது....

**இலக்கியவாதிகள்**

இலக்கியவாதிகளும் இக்கிராமத் தில் நிறைய உள்ளனர். பண்டிதர் செ. பூபாலபிள்ளை, டாக்டர் சோம சுந்தரனார், ஆரையூர் நல். அழகேச முதலியார், தமிழ்மணி சிவ விவேகா னந்த முதலியார், செல்வி திருமலர்ப் பாக்கியம் முதலிய பழைய தலை முறையினரும், நவம், அன்புமணி முனாக்கானா சி.க பொன்னம்பலம், ஆரையூர் அமரன், ஆரையூர் இளவல், ஆ. தங்கராசா, கே. இராசரெத்தினம் முதலிய இடைக் காலத்தலை முறை யினரும், மலர்ச்செல்வன், திசேரா, ரவிவர்மன், தமிழ்ச் செல்வி, ஆரை யூர்த்தாமரை, முதலிய இளைய தலை முறையினரும் இக்கிராமத்தைச் சேர்ந்தவர்களே.

இவர்களைவிட கிராமியக்கலை களை வளர்ப்பதில் பலர் பாடு பட்டுள் ளனர். திருமதி. ச. மு. தங்கம்மா சந்திரசேகரம், த. நல்லலிங்கம் முதலியோர் இதில் முக்கியமான வர்கள்

இவர்களுள் முனாக்கானா, பல விருதுகளைப் பெற்றுள்ளார். கலை மணி, கலாபூஷணம், மக்கள் கவிமணி, கலையரசு, திலக்கோல் விருது, ஆளுனர் விருது முதியவற்றை இவர் பெற்றுள்ளார். 'இலக்கிய நெஞ்சம்'', ''கவிதை நெஞ்சம்'' முதலிய நூல்களை இவர் வெளியிட் டுள்ளார்.

அன்புமணி - தமிழ்மணி, கலா பூஷணம், ஆளுநர்விருது முதலிய விருதுகளைப் பெற்றுள்ளார். 7நூல்க ளை வெளியிட்டுள்ளார். த. நல்ல சிங்கம், ச மு. தங்கம்மா, வே. ஸ்ரீதாஸ் ஆரையூர் இளவல். முதலி யோர் கலாபூஷணம் விருது பெற்றுள் ளனர். சி. க. பொன்னம்பலம் ஒரு புலவர். இது வரை ஏழு நூல்களை வெளியிட்டுள்ளார். ஆ. தங்கராசா, மலர்ச்செல்வன், ரவிவர்மன் முதலி யோர் சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளனர். க. சபாரெத்தினம் 'மொஸ்கோ அனுபவங்கள்' என்ற நூலை வெளியிட்டுள்ளார். ரஜிவ் காந்த என்ற இளைஞர் ''தேடும் தேசம்'' என்ற கவிதைத் தொகுதியை வெளியிடப்பட்டுள்ளார்.

ஆரையம்பதியின் முன்னோடி ஏழுத்தாளரான நவம். நந்தாவதி (சிறுகதைத்தொகுதி), அழகுசுடும் (நாவல்), குமரி முதல் சென்னை வரை (பயணக்கட்டுரை) முதலி யவற்றை வெளியிட்டுள்ளார். இவர் களது மக்கள் அரவிந்தன், முகுந்தன் ஆகியோரும் நூல்களை வெளியிட்டுள ளனர்.

**வாழ்வியல் :**

ஏனைய கிராமங்களில் உள்ளது போலவே இக்கிராமத்திலும் குடி முறை உள்ளது. திருவிளங்குடி, ஆறு காட்டிக்குடி, வங்காளக்குடி, பத்தி நாச்சிக்குடி, வீரமாணிக்கம்குடி, பொன்னாச்சிகுடி, முதலித்தேவன் குடி, புலவனார்குடி, அலரித் தேவன் குடி, மன்றுளாடியார்குடி முதலியன இங்குள்ள மக்களின் முக்கிய குடிக ளாகும். இக்குடிகள் மூலம் கோயில் நிர்வாகம், திருவிழா, உற்சவங்கள், முதலியன மேற்கொள்ளப்படுகின்றன. இக்கிராமத்தில் மூன்று முக்கிய பிரிவுகள் (தெரு) உள்ளன. அவை (1) முகத்துவாரத்தெரு (11)நடுத்தெரு

(111) ஆரைப்பற்றைத் தெரு என்பனவாகும். இவை தவிர சாண்டார் தெரு கைக்கோளார் தெரு, ஆகியனவும் உள்ளன. ஒவ்வொரு தெருவிலும் உள்ளவர்கள் தனித்துவமான இயல்பினைக் கொண்டவர்கள்.

பறைமேளக் கலைஞர்களும் ஒரு புறத்தில் வாழ்கின்றனர். இவர்கள் ஆலய உற்சவங்கள், மற்றும் மரண ஊர்வலம் முதலியவற்றின்போது சேவகம் செய்வர். கண்டியப்பறையின் சாயல் இவர்கள் வாசிப்பில் பிரதிபலிப்பதை எவரும் அவதானிக்கலாம்.

சித்திரை வருஷப் பிறப்பே இக்கிராம மக்களின் முக்கிய கொண்டாட்டமாகும். ஒருவாரம்வரை நீடிக்கும் இக்காலத்தில் கூத்துக்கள், மகுடி, ஊஞ்சல், முதலிய கேளிக்கைகளில் மக்கள் ஈடுபடுவர். புத்தாடை அணிந்து, உலாவருவர். சிறுவர், சிறுமியர் பட்டாம் பூச்சிகள் போல் வலம் வருவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

முருகன் ஆலயத் திருவிழாவும், கண்ணகியம்மன் சடங்கும் இம்மக்களின் முக்கிய சமயச் சடங்குகளாகும், இக்காலத்தில் இவர்கள் மிகுந்த பயபக்தியுடன் நடமாடுவர். கண்ணகியம்மன் சடங்கு காலத்தில் இந்த ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு சடங்கு முதலிய நிகழ்ச்சிகளில் ஈடுபடுவர். நேற்றிக்கடன்கள் நிறைவேற்றுவர். ஊரே விழாக் கோலம் பூண்டு ஒரே கலகலப்பாக இருக்கும். இவை தவிர பரமநயினார் ஆலய உற்சவம், திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய உற்சவம், காளியம்மன் சடங்கு, மாரியம்மன் சடங்கு, பேச்சியம்மன் சடங்கு, முதலியன முக்கிய நிகழ்வுகளாகும்.

**"ஆவணப்பதிவான ஆரையூர்க் கந்தன்"**

ஆரையம்பதி கிராமத்தின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக 'ஆரையூர்க்கந்தன்' என்ற சிறப்புமலர் 1999ல் வெளிவந்துள்ளது. ஆரையம்பதியின் முக்கிய ஆலயமாகிய கந்தசுவாமி ஆலய புனராவர்த்தாவன மகாகும்பாபிஷேக மலரான இதில், பல்வேறு விடயங்களும் வகுத்துக் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

அவை (1) வரலாற்றியல் (11) ஆலயவியல் (111)வாழ்வியல் (iv) செய்யுள் இயல் (v) பொது என்பனவாகும்.

இதில் வாழ்வியல் என்னும் பகுதியில் பின்வரும் விடயங்கள் இடம் பெறுகின்றன. அவை (1) ஆரையம்பதி மக்கள் வாழ்வியல் (11) வரலாற்றுப் பின்னணியும், கலை வளர்ச்சியும் (111)ஆரையம்பதியின் முக்கூட்டுக் கலை (iv) கூத்துக்கலை (V) பண்டிகைகளும் கொண்டாட்டங்களும் (VI)கிராமிய விளையாட்டுக்கள்

இக்கட்டுரைகளும் இதனோடிணைந்த ஏனைய கட்டுரைகளும், ஆரையம்பதியின் சமகால வரலாற்றைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஆலயங்கள் நிறைந்த ஆரையம்பதி என்னும் எமது தலைப்பிற்கேற்ப பின்வரும் கட்டுரைகளும் இம் மலரில் இடம்பெறுகின்றன. (I) ஆரையம்பதி கந்தசுவாமி ஆலய வரலாறு (II)ஆலய பூசைகளும், உற்சவங்களும் (III)



ஆரையம்பதி கண்ணகையம்மன் சடங்கு

(IV) ஆரையம்பதியின் ஆலயங்கள். மொத்தத்தில் இம்மலர் ஆரையம் பதி கிராமத்து வரலாற்றின் ஒரு உசாத் துணை நூலாக அமைகிறது.

அன்புமணி

மட்டக்களப்பில்.............

22கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

**The MORDERN Jewellary**

Head Office : 123/2, Sea Street,
Colombo - 11
Tel : - 011-2421026, 011-2473069, 011-4710405
Mobile : 0777-845272



Branch :- 18, Central Road
Batticaloa
Tel : - 065-2222528, 065-2223644

Showroom :- 32, Beach Road,
Kattankudy
Tel : - 065-2245081

AD/0008

# மட்டுநகரில் நடந்த கலைஞர்களை வாழ்த்தும் உன்னத பெருவிழா!

மட்டக்களப்பு மாவட்ட கலை, இலக்கிய வாதிகளை எண்ணி, போற்றி வளர்க்கும் பண்பு எம்மக்கள் மத்தியில் இல்லாதிருப்பது வேதனை தருகிறது.

இந்த நிலையில் மட்டக்களப்பில் புத்தக நிலையம் நடாத்தி மாணவர் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரையான அனைவரது அறிவுப்பசிக்கும் விருந்தூட்டும் நிலையமான ராஜாஸ் புத்தக நிலைய அதிபர் நடராசா ஞானச்சந்திரன் கலை, இலக்கிய வாதிகளைப் பாராட்டி விருந்தோம்பல் செய்து ஆதரவளித்திருக்கும் நிகழ்வானது நெஞ்சை நெகிழ வைத்திருக்கிறது.

நிகழ்வு இடம்பெற்ற தினம் மதியம் 12.00மணியளவில் பேராளர்கள், இலக்கிய வாதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பல பேர் "கிறீன் கார்டின் விடுதியில்" கூடியிருந்தனர்.

அவ்வேளையில் நிகழ்வு ஆரம்பமானது. இந்நிலையில் ராஜாஸ் புத்தக நிலைய அதிபரின் கன்னி உரை இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து "வாழ்த்துவோம் பாராட்டுவோம்" என்ற நிகழ்வு ஆரம்ப மானது.

நிகழ்வில் பாராட்டுப் பெறும் கலைஞர்களை எண்ணிப்பார்ப்பது சாலப்பொருத்தமானதாக அமையுமல்லவா? இந்த வகையில் முதலில:-

**ஓ.கே. குணநாதன் :-**

இவர் எழுத்தாளர் ஊக்குவிப்புமையம் எனும் அமைப்பை நிறுவி அதன் மூலம் இலக்கிய உலகில் தமது படைப்புக் களை வெளிக் கொணர முடியாது ஏங்கி தவிக்கும் படைப்பாளிகளின் ஆக்கங்களை புத்தக வடிவில் வெளிக்கொணர வித்திடுபவர்.

இவர் இதவரை 45க்கு மேற்பட்ட நூல்களை வெளியிட் டுள்ளார். இவற்றில் சிறுவர் இலக்கியங்களே அதிகமாகும் - இவர் சிறுவர் இலக்கியத்துக்காக 2008ல் அரச சாகித்திய மண்டல பரிசு பெற்றுள்ளார்.

**வைத்திய கலாநிதி ஆர். ருஷாந்தன்:-**

அழகுக்கலை சார்பாக மாகாணமட்ட விருது பெற்றுள்ளார் அத்தோடு இவ்வாண்டு அரச சாகித்திய மண்டல விருது இவருக்கு கிடைத்திருக்கிறது.

**கலாநிதி. செ. யோகராசா:-**

எழுதப்பட்ட நூல்களை ஆய்வு செய்து விமர்சனம் செய்வதில் வல்லவர். இவரின் ஆய்வு வல்லமைக்கு அரச சாகித்திய மண்டல விருது கிடைத்துள்ளது.

**கவிஞர் திமிலைத் திமிலன் :-**

அன்று தொட்டு இன்று வரை கவிதைத் துறையில் தனது ஈடுபாட்டைச் செலுத்துபவர். இவரின் கவிதைத் துறைக்காக அரச சாகித்திய மண்டலப் பரிசு கிடைத்திருக்கிறது.

இவ்வாறு பரிசு பெற்ற கலைஞர்களை பேராசிரியர் சி. மௌனகுரு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஆர். கேதீஸ்வரன், கல்வி அமைச்சின் ஆலோசகர் சல்மா ஹம்சா, பேராசிரியை திருமதி சித்திரலேகா மௌனகுரு, இளைஞர் சேவைகள் மன்ற கிழக்குப் பிராந்திய பணிப்பாளர் பொன். செல்வநாயகம், மட்டக்களப்பு மாவட்ட உதவிப்பணிப்பாளர் எஸ். தவராசா, ஊடக வியலாளர் இ. பாக்கியராஜா உட்பட பலர் பாராட்டி உரையாற்றினர்.

இதனையடுத்து மேற்படி நான்கு கலைஞர்களுக்கும் ராஜாஸ் புத்தக நிலைய அதிபர் பொன்னாடை போர்த்தி, பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

அடுத்து மட்டக்களப்பு மக்களின் உயரிய பண்பான விருந்தோம் பலையும் நடாத்தி கலைஞர்களை வாழும் போதே வாழ்த்தும்" தன்மையை அழகுற நிகழ்த்தினார்.



இவ் வாறான கலை ஆர்வலர் கள் எம் மண்ணில் உருவாவது மனநிறைவு அளிக்கிறது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தனவந்த வர்கள் கலை, இலக்கிய வாதிகளில் தமது கவன த்தை ஈர்க்க வேண்டும்

இதன் மூலம் எதிர்காலத்தில் கலை ஆர்வத்தோடு, உள்ள கலைஞர்கள் இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணர முன்வருவர்.

எனவே அனைவரும் இதனை உணர்ந்து செயற்படுவது காலத்தின் தேவையாகும்.

--தர்மா--

# மாணவர் வினாவிடை அரங்கு

**இல-3**





**நிபந்தனைகள்:-**

1. மாணவர்கள் மட்டுமே இப்போட்டியில் பங்கு கொள்ளலாம்
2. ஒருவர் எத்தனை விடைக் குறிப்புகளையும் அனுப்பி வைக்க முடியும்.
3. அனுப்பி வைக்கப்படும் விடைக்குறிப்புகளுடன் நுழைவுச்சீட்டுக்களும் இணைத்தனுப்பப் படவேண்டும். நுழைவுச்சீட்டுக்கள் இணைத்து அனுப்பப்படாத விடைக் குறிப்புக்கள் போட்டியில் இணைத்துக் கொள்ளப்பட மாட்டாது.
4. இவர்களில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே 250/- 150/-, 100/- பணப்பரிசில்கள் வழங்கப்படும்.

**வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை வழங்குபவர் :-லயன் எம். கன்கரெத்தினம், மக்கள் வங்கி நகரக்கிளை முகாமையாளர்.**

5. விடைக்குறிப்புக்களை அனுப்பவேண்டிய இறுதித் திகதி கார்த்திகை மாசி 30ஆம் திகதி - 2009



அனுப்பவேண்டிய முகவரி

மாணவர் வினாவிடை அரங்கு
தென்றல், 34/1, பழைய கல்முனை வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.

**வினாக்கள் -இல: 3**

1. இலவசக்கல்வியின் தந்தை யார்?
2. தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் எத்தனை?
3. புவியீர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்தவர் யார்?
4. இலங்கையிலுள்ள மாகாணங்கள் எத்தனை?
5. நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு எது?

நுழைவுச்சீட்டு - இல - 03

முழுப்பெயர் :........................................................................

தரம் :........................................................................

பாடசாலை :........................................................................

:........................................................................

**வினா விடை அரங்கு - 02ற்கான விடைகள்**



1. ஆனந்த சமரக்கோன்
2. சுசில் பிரேம் ஜெயந்த
3. புதுடில்லி
4. 1931 ஆம் ஆண்டு
5. மா, பலா, வாழை

**இதற்கான சரியான விடையினை அனுப்பியவர்களிலிருந்து பரிசில்களுக்காக தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் பின்வருமாறு:-**

1) நிமால் ரஞ்சன் மதுஷா
தரம் - 4G
மட்/விவேகானந்தா மகளீர்,
மகாவித்தியாலயம்,
கல்லடி

3) செந்தில்குமார் கோபிதா
தரம் - 4
மட்/கிரான் குளம்,
சரஸ்வதி வித்தியாலயம்,
கிரான்குளம்



2) ரி. டிவஸ்ரிகாதேவி
தரம் - 4G
மட்/கல்லடி வேலூர்,
ஸ்ரீ சக்தி வித்தியாலயம்,
கல்லடி



ச. தட்சாயன்
தரம் - 04
மட்/ ஆரையம்பதி சிவமணி
வித்தியாலயம்.




ம. பிரவிந்
தரம் - 4
மட்/ ஆரையம்பதி சிவமணி
வித்தியாலயம்

'தென்றல்;' சஞ்சிகை ஓராண்டு நிறைவை
முன்னிட்டு நடாத்தும் அணிக்கு ஆறுபேர் கலந்து கொள்ளும்

# மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி



**இடம்:-** இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானம்

**காலம்:-** மார்ச் 7ஆம், 8ஆம் திகதிகளில் – 2009

**நிபந்தனைகள்**

01 அணிக்கு 6பேர் பங்கு பற்ற வேண்டும்.

02 விக்கெட் காப்பாளர் பந்து வீச முடியாது.

03 போட்டிகள் யாவும் சர்வதேச நிபந்தனைக்கமைய நடத்தப்படும்.

04 நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

05 பதிவுக் கட்டணம் 300/= செலுத்தவேண்டும்.

06 பதிவு செய்யும் போதே பதிவுக் கட்டணமும் செலுத்தப்பட வேண்டும்.

07 பதிவு செய்ய வேண்டிய இறுதித்தினம் பெப்ரவரி 15, 2009

## பரிசு விபரம்

முதலாம் இடம் பெறும் அணிக்கு - வெற்றிக்கிண்ணமும், 2000/= பணப் பரிசும், ஆறு தொப்பிகளும் வழங்கப்படும்.

இரண்டாம் இடம் பெறும் அணிக்கு - வெற்றிக் கிண்ணமும் 1000/= பணப்பரிசும், ஆறு தொப்பிகளும் வழங்கப்படும்.

மூன்றாம் இடம பெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் 500/= பணப்பரிசும் ஆறு தொப்பிகளும் வழங்கப்படும்.

அத்தோடு சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர், சிறந்த துடுப்பாட்ட வீரர்களுக்கும் வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

**பதிவு செய்யும் இடங்கள்**

| | | |
|---|---|---|
| **சரண்யா ஜுவலரி**<br>பிரதான வீதி,<br>களுவாஞ்சிகுடி. | **சுபாஜினி நகைமாளிகை**<br>51, பிரதான வீதி<br>மட்டக்களப்பு. | **Panasonic/MC**<br>239A,திருமலை வீதி,<br>மட்டக்களப்பு. |

# வாசகர் நெஞ்சம்





என் அபிமான தென்றலின் கடந்த இதழில் இடம்பெற்ற சிறுகதை எம் மக்களின் அவலங்களை படம் போட்டுக் காட்டுவதாக வெளி வந்திருப்பது பாராட்டுக்குரியது.

ரி. குமணன்
செங்கலடி

---

தரம் 5 இல் கல்வி பயிலும் எம்போன்ற மாணவர்களின் அறிவுப் பசிக்கு விருந்தளிக்கும் வகையில் சுகந்தம்: 3 இதழ் புலமைப்பரிசில் மாதிரி வினாத் தாளை சுமந்து வெளிவந்திருந்தது. இனிவரும் காலங்களிலும் தென்றல் புதுப் பொலிவோடு வெளிவர வேண்டும் என்பதே எனது பேரவா!.

எம். ரமணன்
வவுனியா

---

தென்றல் பாடசாலை அறிமுகம் எனும் பகுதியையும் இணைத்துக் கொண்டால் மாணவர்கள் மற்றும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் வெளி உலகு அறிய வாய்ப்பு ஏற்படுமல்லவா?

எஸ். இளங்குமரன்,
காரைதீவு

இவ் இதழில் பாடசாலை அறிமுகம் எனும் பகுதியில் கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலய பாடசாலை இடம்பெறு கின்றது. இதில் உங்கள் பாடசாலை அறிமுக்கும் இடம் பெறவேண்டுமாயின் உங்கள் பாடசாலை அறிமுகம் தொடர் பான விபரங்களை புல்ஸ்கப் தாளில் 04 பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி பாடசாலை ஆசிரியர் குழாம். மற்றும் மாணவ தலைவர்களையும் உள்ள டக்கிய 2 படங்களை அனுப்பி வையுங் கள். தென்றல் அவற்றை நிட்சயம் உள்வாங்கிக கொள்ளும்.

(ஆ-ர்)

---

இன்று தென்றலில் அகில உலகமெலாம் பரவி வீறுநடை போடுகிறது. இதனை எம் போன்ற கலை உள்ளங்களும் பெற ஆவன செய்வீர்களா?

வித்துவான் செபரெத்தினம்
கனடா

தென்றலின் சுகந்தம் 3 இதழை அனுப்பி வைக்கிறோம். தென்றலை உங்கள் நண்பர்களுக்கும் அறிமுகம் செய்து தென்றலின் வழற்சியில் பங்கு கொள்ளுங்கள்

(ஆ-ர்)

---

ஊர் அறிமுகம் எனும் பகுதியில் களுதாவளை கிராமம் தொடர்பான சகல விடயங்களையும் உள்ளடக்கி பரந்த கண்ணோட்டமாக பல தகவல்களை எழுதிய ஆ. அரசரெத்தினத்துக்கு எனது தனிப்பட்ட பல்கோடி நன்றிகள்

ம. இளந்திரயன்
லண்டன்

மட்டு நகரில்....

வெனிலா ஐஸ் கிறீம்
ஜெலி ஐஸ் கிறீம்
கஜு ஐஸ் கிறீம்
புறூட்ஸ் ஸலட் ஐஸ் கிறீம்
பாலூதா

மிக்ஸ்ட் புறூட்
அப்பிள் ஜுஸ்
விளாம்பழ ஜுஸ்
கட்லட் வகைகள்

போன்றவைகளை ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**BOMBAY SWEET HOUSE**


and Cool Bar
56, main street, Batticaloa
Tel : 065

மட்டுநகரில........

சகல விதமான போன் வகைகளையும், போன் உதிரிப்பாகங்களையும், போன் காட் வகைகளையும் தெரிவு செய்து கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்



**The Phone Shop**




No.20E, Central Road,
Batticaloa.
Tel :- 077-9001900

AD/0007

# திருந்திய உள்ளம்!

கமலா.... கமலா என்னம்மா செய்யிறா? இங்கே வா... அப்பாவின் தனிந்த குரலால் தன் மனைவியை அழைத்தது மகள் ராஜிக்கு கேட்டதும், இதோ வந்திட் டேம்பா. ஏன்டீ? ராஜி அப்பா காட்டு கத்து கத்துறார் நீ பாட்டுக்கு ஆடி அசைந்து போற, என்று கடிந் தாள் அம்மா. போம்மா அப்பா எதையாவது மறந்து வைச்சிட்டுத்தான் தேடி அலுத்தப்புறம் கூப்பிடுவார் இது தெரியாதா? அம்மாவின் அவசரம்.... அப்பாவின் நிதானம் இரண்டும் எதிருக்குப் புதிராத்தான் எப்போதும் கமலாவிற்கு தெரியும்.

அப்பாவின் அருகில் சென்ற ராஜி, ஏம்பா கூப்பிட்டீங்க.. எதையாவது, எங்காவது வைச்சிட்டிங்களா? ஆமாடா செல்லம். என்ட மூக்கு கண்ணாடிய எங்கேயோ வைச்சிட்டேன். தேடினா காணல்ல... என்றார் அப்பா. அப்பா... என்றவளின் கண்களில் மூக்குக்கண்ணாடி இருந்த இடம் தெரிந்ததும், அதை எடுத்து அப்பாவிடம் நீட்டினாள் ராஜி. இந்தாங்கப்பா, T.Vக்கு பக்கத்திலே வைச்சிட்டு வேறெங்கெண்டாலும் தேடினா கிடைக்குமா? சொறியம்மா நான்தான் மறதியா பேப்பர் படித்து, இடையிலேயே எங்கேயோ வெச்சன் மறந்திட்டேன் என்றார்.


வாத்தியார் வடிவேல் என்றாலே அந்த காலத்தில் ஸ்கூலே நடுங்கும். அவர் போடற சத்தத்திலே... இப்ப என்னவோ மனுஷன் சாதுவாகி விட்டார். அவர் மனைவி கமலாவிற்கு தெரியும் ஏன்? இப்பல்லாம் சாதுவாகி அமைதியா இருக்கார்னு.

இளையவனுக்கு அப்போ ஐந்து வயதிருக்கும் போது அவர் ரிட்டாயர் ஆக இன்னும் ஒரு வருடம் இருந்தது. அவன் மிக மிக குழப்படி. எதையாவது செய்து எல்லார்கிட்டேயும் ஏச்சுதான் வாங்குவான். இப்படித்தான் அன்று மாலைக்குள் அவன் ஏதோ விசமம் செய்ய அவருக்கு கெட்ட கோபம் வந்து, அவனை அடித்து விட்டார். அடி என்றால் சின்ன அடி அல்ல- வீட்டில் உள்ளவர்கள் அப்படியான கோபத்தை அவரிடம் அது வரை காணாததால் மிகவும் பயந்து விட்டனர். இந்த நிகழ்ச்சியால் அவனுக்கு தொடர்ந்து மூன்று நாட்கள் காய்ச்சல். இதை கவனித்த வடிவேல் வாத்தியாரின் தந்தை ஏன்டா வடிவேலு அந்த காலத்தில நீ செய்யாத குழப்படியா?

ஏன்டா! உன்ர பிள்ளை என்ன செய்திட்டான் பெரிசா? நாங்கல்ல நீ செய்த குழப்படிய தாங்கிட்டோம். எப்பவாவது உனக்கு இந்த மாதிரி அடித்திருக்கேனா? சொல்லுடா பாவிப்பயலே... என்று ஏசிக்கொண்டிருந்தார் அப்பப்பா. இரண்டு நாட்கள் கடந்து சில மாற்றங்கள் தென்பட்டன. ஸ்கூல் பிள்ளைகளாகட்டும், வீட்டில் உள்ளவர்களாகட்டும் எவருக்கும் ஏசுவதோ அதட்டிக் கொடுப்பதோ இல்லை. வாத்தியார் வடிவேல் வாறார் என்றால் மாணவர்களிடம் முதலில் இருந்த பயம் இப்போது இல்லை. இந்த நிகழ்ச்சியின் பின் அவர் சாதுவாக இருந்து விட்டார். மனிதன் திருந்த இடமுண்டு. ஆனால் சிலர்தான் திருந்துவார்கள். சிலர் திருந்தமாட்டார்கள்.

இதே சமயம் வெளியில் தேனீர்க்கடையில் இருந்த வானொலி பாடலை கதறிக்கொண்டு இருந்தது...
"திருந்தாத உள்ளங்கள் இருந்தென்ன லாபம்...... கண் போன போக்கிலே நிழல் போகலாமா? கால் போன போக்கிலே நிழல் போகலாமா!"

--குகன்-




குட்டிக்கதை

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி
## வினாத்தாள் - 01
### பகுதி - II

**பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

குளிர்ச்சியான செடி கொடிகள் எம்மை உற்சாகப்படுத்தும். கண்ணுக் கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேலெனக் காணப்படுகின்றன. அது தூரத்துக்குத் தெளிவாகத் தெரியாத நிரந்தரமான பனிமூட்டம் போல் காணப்படுகிறது.

01. இப்பகுதியின் மூலம் உணர்த்தப்படும் காலம் யாது?

..............................................................................

02. ''தூரம்'' என்ற பதத்துக்கு எதிர்ச்சொல் என்ன?

..............................................................................

03. விசேடமாகக் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய இரண்டு சொற்கள் தருக?

I ..............................................................................

II ..............................................................................

04. ''நிரந்தரமான'' என்ற சொல்லுக்குச் சமமான சொல் ஒன்றைத் தருக?

..............................................................................

05. ''கண்ணுக் கெட்டிய தூரம்'' என்பதற்கு உமது விளக்கத்தைத் தருக?

..............................................................................

க ல் வி த் தெ ன் ற ல்

**கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவனுக்கு அதிபரால் ....................................அளிக்கப்பட்டது.

(பணப்பரிசு/பனப்பரிசு/பணபரிசு)

07.திரு. விக்கிரமசிங்க அவர்கள் ஒரு பிரசித்தமான ........................................... ....................................ஆவார்.

(எழுது வனைஞர்/எழுது வினைஞர்/எளுது வினைஞர்)

08. தபால்........................................................................................ இங்கிருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது

(காறியாலயம் /காரியாலயம் /கார்யாலயம்)

09. இவ்வூர்த் தலைவர் ........................... ........................................... ................இல் வேலை செய்கிறார்.

(கலாசார அமைச்சு/களாசார அமைச்சு/கழாசார அமைச்சு)

**பின்வரும் சொற்களின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.**

10. பிறந்தநாள் :- ................................................................................

11. தபால் முகவரி :- ........................................................................

12. பாடசாலை :- ..............................................................................

13. மரம் :-..........................................................................................

**பின்வரும் சொற்றொடரின் சிங்கள உச்சரிப்பைத் தமிழில் எழுதுக.**

14.அங்கே போங்கள் :- ..................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக**

15. இரவில் மலரும் பூ.
    1) அல்லி 2) மல்லிகை 3) அசோகா 4) தாமரை

16. இலங்கையில் மட்டும் காணப்படும் மீன் வகை.
    1) திரலி 2) மணலை 3) வுளத்ஹபயா 4) விரால்

17. தேசிய சங்கீத உபகரணம் அல்லாதது.
    1) மத்தளம் 2) உடுக்கு 3) மேளம் 4) பியானோ

**பின்வரும் விலைச்சிட்டையை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

| | | |
|---|---|---|
| சம்பா அரிசி | 2Kg | ரூபா. 144.00 |
| சிவப்பரிசி | 4Kg | ரூபா. 240.00 |
| பருப்பு | 500g | ரூபா. 95.00 |
| பாசிப்பயறு | 500g | ரூபா. 70.00 |
| சீனி | 2Kg | ரூபா. 128.00 |
| பாண் | 2 | ரூபா. 70.00 |
| தேங்காய் | 21 | ரூபா. 300.00 |
| சவர்க்காரம் | 2 | ரூபா. 70.00 |

18. கொள்வனவு செய்த பொருட்களின் மொத்த விலை என்ன?

..........................................................................................

19. இந்த விலைச் சிட்டையைப் பெற்றுக் கொண்டு ரூபா 1500 கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு?

..........................................................................................

20. புடவை கழுவும் சவர்க்காரம் ஒரு டசின் கொள்வனவு செய்யத் தேவையான பணம் எவ்வளவு?

..........................................................................................

கவித்தென்றல்

# சமுதாயப் போலிகள்

ஊருக்குப் பெரியவராய்
உயர்சேவைக் குரியவராய்
உலவிடுவார் வீடெல்லாம் தங்கமாம் - இவர்
உள்ளந்தான் இலட்சுமியும் தங்குமாம் - வெறும்
பேருக்கும் புகழுக்கும்
படையெடுக்கும் போலிகளை எங்குமாம் - இவர்
பொருட்டாலே ஊர்வளங்கள் பொங்குமா?

காலையிலே ஒருகட்சி
கருக்கலிலே மறுகட்சி
கடப்பறிந்து பாய்ந்திடுவார் மந்தியாய் - இவர்
காரணமென்ன பரம்பரைப் புத்தியா? - விழல்
வேலையிலே வேதாந்தம்
வளர்த்திடுவார் நாளாந்தம்
வாசலிலே கிடக்கின்றார் நந்தியாய் - இவர்
வகைமோசம் வழியுதுபார் தொந்தியால்!

வான்வெளியில் கார்மூட்டம்
வாழ்வியலும் போர்மூட்டம்
வளப்போடு நிறைந்திடுமா நாட்டிலே? -நம்
வழிப்பயணம் சீர்பெறுமா "றோட்டிலே" - பகை
வீணழிவு நீங்காமல்
விளைநிலங்கள் ஓங்காமல்
விடிந்திடுமா நம்பாடு வீட்டிலே - பகை
விலகிடுமா சும்மா தன் பாட்டிலே?

சமுதாயப் போலிகளும்
சாக்கடையாம் காலிகளும்
சதிராட்டம் போடுகின்றார் வழியிலே - இவர்
சதிமானம் தெரியுதுபார் விழியிலே - தினம்

அழுதான மொழிபேசி
அடுத்தவனை வலைவீசி
ஆதாயம் ஈட்டுகின்றார் தொழிலிலே – இவர்
அநியாயம் கூறிடத்தான் மொழியிலே

பதவிக்குக் கால்பிடித்து
"பவருக்கு" வால்பிடித்து
பட்டங்கள் சேர்த்திடுவார் பெயரிலே – இவர்
பவுசெல்லாம் மந்திரிமார் தயவிலே–. பிறர்
உதவிக்கு இவரிடமே
உபகாரக் "கவருடனே"
ஓட்டிவந்தால் ஒருபோதும் துயரிலே – பணி
ஒழுங்காக நிறைவேறும் பயமிலே!

– ஏறாவூர் அனலக்தர் –

---

## புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - 01, பகுதி I ற்கான விடைகள்

| | |
|---|---|
| 01 - 1 | 02 - 3 |
| 03 - 3 | 04 - 1 |
| 05 - 3 | 06 - 3 |
| 07 - 3 | 08 - 2 |
| 09 - 1 | 10 - 3 |
| 11 - 3 | 12 - 1 |
| 13 - 2 | 14 - 3 |
| 15 - 3 | 16 - 1 |
| 17 - 1 | 18 - 1 |
| 19 - 1 | 20 - 3 |



# புதிய வரவுகள்




நூல் :- செங்கதிர்
ஆசிரியர்:- செங்கதிரோன்
விலை:- ரூபா. 50
முகவரி:- 19, மேல் மாடித்தெரு,
மட்டக்களப்பு.

செங்கதிர் ஆனி மாத இதழ் வெளிவந்திருக்கிறது. இவ் இதழில் செங்கதிரோனின் ஆசிரியர்கருத்து, அதிதிப்பக்கம், பின்னையமானிட இலக்கியம், சிறுகதை, ஈழத்து எழுத்துக்கு தமிழ் நாட்டில் கிடைத்த அங்கீகாரம் நீத்தார் நினைவுகளில் பேராசிரியர் நந்தி தொடர்பான விபரங்கள், சந்தி காந்தா முருகானந்தம் எழுதிய பால்நிலை பற்றிய பழைய எல்லைகள் தகர்க்கப்படல் பெண்ணிய மேம்பாட்டை ஏற்படுத்தும் என்ற கட்டுரை, கவிதை, போன்ற பல்வேறு அம்சங்களைச் சுமந்து வெளிவந்திருக்கிறது.

---




நூல் :- நீங்களும் எழுதலாம்
ஆசிரியர் :- எஸ். ஆர். தனபாலசிங்கம்
விலை :- ரூபா. 25
முகவரி :- ஆசிரியர்
''நீங்களும் எழுதலாம்''
103/1,திருமால் வீதி,
திருகோணமலை.

''நீங்களும் எழுதலாம்'' (ஆடி- ஆவணி) 2008 இருமாத கவிதை இதழ் பல்வேறு சுவையான கவிதைகளை சுமந்து வெளி வந்திருக்கிறது.

''உற்பத்தி உறவும் கவிதைப் பயன்பாடும்'' எனும் தலைப்பிலான ஆசிரியர் கருத்து, கவிதைகள், கருத்தாடற்களம், வாசகர் கடிதம், சஞ்சிகை அறிமுகம் போன்ற பல்வேறு அம்சங்களைச் சுமந்து வீறுநடை போடுகிறது.

# சமையல் குறிப்பு

தயாரிப்பு :-
கவிதா. கிருபாகரன்

## பேரிச்சம்பழ அல்வா

### தேவையான பொருட்கள்

பேரிச்சம்பழம் - 1/2 Kg
றவை - 1/4 Kg
சீனி - 1/4 Kg
மாஜரின் - 150g
வனிலா, ஏலம், கறுவா - சிறிதளவு
நீர் - 1/2 Cup (அஸ்ரா Cup)

### செய்முறை:-

01 முதலில் பேரிச்சம் பழத்தை சிறு துண்டுகளாக வெட்டவும். றவையை சிறிது மாஜரின் விட்டு பொன் நிறத்திற்கு வறுக்கவும்.

02 தண்ணீரில் சீனியை கரைத்து. அதை அடுப்பில் வைத்துக் காச்சவும்.

03 தேன் பாகு வந்ததும் பேரீச்சம் பழத்தை கொட்டிக் கிளறவும்.

04 பின் றவையையும் கொட்டிக் கிளறவும். அத்தோடு அஸ்ராவை இட்டு நன்றாகக் கிளறவும்.

05 அதன் பின்னர் வனிலா. ஏலம். கறுவா என்பவற்றை இட்டுக் கிளறவும்.

06 அஸ்ரா பூசிய தட்டில் இட்டு அமத்தி வெட்டி எடுக்கவும்.




மட்டுநகரில்......................
அழகிய 22கரட் தங்க நகைகளை உத்தர வாதத்துடன் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

சுபாஜினி
ஜுவலர்ஸ்

51. பிரதான வீதி.
மட்டக்களப்பு
தொ. பேசி : 065-2224863

AD/0004

## புலமைப் பரிசில் பரீட்சை – 2008 இல் சித்தி பெற்றோர் விபரம்

### மட்/கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்



சிவா. விதுசனன்
புள்ளிகள் :- 126



வெற்றிவேல். பிரதீபன்
புள்ளிகள் :- 116



பத்மநாதன். டேஜினி
புள்ளிகள் :- 125



புனிதகரன். சஜீவ்
புள்ளிகள் :- 116

### மட்/புனித மிக்கேல் தேசிய பாடசாலை



ராம் வெங்கடேஷ். ராகவன
புள்ளிகள் :- 152



அருள்குமாரன். மீனஸ் சந்துரு
புள்ளிகள் :- 117

## மட்/கல்லடி விவேகானந்தா மகளிர் மகா வித்தியாலயம்



சந்திரகுமார். நிலக்சலா
புள்ளிகள் :- 149



ச. டிலக்ஷனா
புள்ளிகள் :- 154



வி. சுரேக்கா
புள்ளிகள் :- 132



தே. பவனுஜா
புள்ளிகள் :- 126



தர்மபாலன் கீர்த்தனா
புள்ளிகள் :- 137



சுதாகரன் யதுஷாடினி
புள்ளிகள் :- 124



சற்குணானந்தன் கேசங்கி
புள்ளிகள் :- 118

மட்/கிரான்குளம் விநாயகர் ம.வி



உதயகுமார். சிவகுமார்
புள்ளிகள் :- 118

மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்திவிநாயகர் மகா வித்தியாலயம்



தியாகராசா டிதுசனன்
புள்ளிகள் :- 135



பிரபாகரன் றக்சனா
புள்ளிகள் :- 124

மட்/கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலை



மகேஸ்வரன். கோகிஷன்
புள்ளிகள் :- 123



சிவானந்தன். அபியவாஸ்கர்
புள்ளிகள் :- 127



சண்முகராஜா. அனோஜன்
புள்ளிகள் :-133



ஏரம்பமூர்த்தி. ஹரிஜன்
புள்ளிகள் :- 121



ஜோன்கிறீஸ்டோபர். தன்ஜெயன்
புள்ளிகள் :- 141

## மட்/கல்லடி முகத்துவாரம் விபுலானந்தா வித்தியாலயம்



சந்திரசேகரம் சஜிதா
புள்ளிகள் :- 131



சத்தியசேகரம் சப்திகா
புள்ளிகள் :- 123



இன்பநாதன் சோபிகா
புள்ளிகள் :- 115



பாலேந்திரன் சுஜிதன்
புள்ளிகள் :- 120



புவிராஜ் ருசாந்
புள்ளிகள் :- 116

## மட்/களுதாவளை மகா வித்தியாலயம்



புஸ்பராஜா சிவராஜினி
புள்ளிகள் :- 120



தேவேந்திரராஜா மதுர்சன்
புள்ளிகள் :- 115

## மட்டக்களப்பு பிரதேசத்தின் முதற்சஞ்சிகை "பாரதி"

கிழக்குப் பிரதேசத்தின் ஆரம்பகால இலக்கியச் சஞ்சிகைகளுள் முக்கியமான தொன்றாகவும் இன்று வரையான ஆய்வின்படி மட்டக்களப்பு பிரதேசத்தின் முதற்சஞ்சிகை யாகவும் பாரதியை இனங்காண முடிகின்றது.

இப்பாரதியின் முதல் இதழ் 1949 அளவில் வெளிவந்திருக்கின்றது. தேசிய மாத இதழ் என்ற தலைப்பில் வந்துள்ள இவ்விதழின் பதிப்பாசிரியர் ம. நாகலிங்கம். நிர்வாக ஆசிரியர் சபாரத்தினம். பிரசுரகர்த்தா கு. த. மூர்த்தி. இவ்விதழ்கள் ஒவ்வொன்றும் பதுளை, கொழும்பு, கண்டி என வெவ்வேறிடங்களில் அச்சிடப்பட்டிருப்பினும் பிறந்தகம் மண்டூர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஓரிதழின் விலை 30சதமாகவும், வருடசந்தா ரூபா நான்கு ஆகவும், விலை குறிக்கப்பட்டுள்ளது. இச்சஞ்சிகையின் மகுட வாசகம் "சாதிச்சண்டை போச்சோ உங்கள் சமூகச் சண்டை போச்சோ" (கவிஞர் பாரதியின் பாடலடிகள்) என்பதாகும்.

மேற்குறிப்பிட்ட பாரதி இதழ் மட்டக்களப்பு பிரதேசத்தில் அல்லது ஈழத்தின் நவீன இலக்கிய உருவாக்கத்தில் பெற்றுள்ள இடம் எத்தகையது என்பதே எமது இன்றைய கேள்வியாகின்றது.

எனக்குக் கிடைத்துள்ள பாரதி இதழ்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது முனாக்கானா, கோணேஸ், கவி G.M. செல்வராஜ், பரமஹம்சதாசன், அன்புதாசன் முதலானோர் பாரதி இதழ்களில் கவிதைகள் வழங்கியிருப்பதனை அறிய முடிகின்றது. இவர்கள் முறையே, தமிழ் , தமிழ்க்கடமை, எழுத்து முயற்சி, பொங்கல், காதல் என்பனபற்றி எழுதியுள்ளனர்.

இவர்களுள் கவி. G.M. செல்வராஜ் என்பவரெழுதிய கவிதை சமூக நோக்குடன் நவீன கவிதைக்குரிய அம்சங்கள் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அதன் ஒரு பகுதி, பின்வருமாறு:-

**இதுவா பொங்கல்**

"ஏழைகளைக் கூப்பிட்டு ஏசிப்பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
நாளை வா கூலிதர என்று சொல்லி
நாட்டாண்மை காட்டி எந்நாளும் தங்கள்
பேழையிலே நிரப்பிவிட்ட பணத்தைக் கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கிலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கைகட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமா?"

முற்போக்கு நோக்குடைய மேற்குறித்த கவிதையை எழுதியவர். எவ்வூரினர் என்று அறியமுடியாவிடினும், மட்டக்களப்பு சார்ந்தவரென்பது (ஏனைய பாடல் பகுதிகளூடாக தெரியவருகின்றது. இவ்விதத்தில் ஈழத்தில் நாற்பதுகளின் பிற்கூற்றில் முகிழ்த்த நவீன

கவிதையின் தோற்றம் பற்றிய ஆய்வாளரது பட்டியலுள் ஒருவராக இக்கவிஞரையும் துணிந்து குறிப்பிடலாம் என்பதில் ஐயமில்லை.

சமகால ஏனைய ஈழகேசரி (கொழும்பிலிருந்து வெளியான) பாரதி ஆகியனவற்றிலே பரிசோதனை முயற்சியாக வசன கவிதை வெளிவந்துள்ளது போன்று. ''பாரதி''யிலும் வசன கவிதையொன்று எஸ்.கே. ராஜு என்பவரால் எழுதப்பட்டுள்ளது. விதந்துரைக்கற் பாலது. அக்கவிதையின் சில பகுதிகளிலேயே வசனக்கவிதைப் பண்பு வெளிப்படுகின்றதாயினும் அதுகாரணமாக அதன் முக்கியத்துவம் குன்றிவிடுகின்றது என்பதற்கில்லை! காதலிபற்றிய மைந்த அக் கவிதையின் ஒருபகுதி பின்வருமாறமையும்:-

''அம்புலி கண்டு அல்லலுற்றேன் என்றாய்
எங்கள் ஊர் சந்திரனுள் நீயே இருக்கின்றாய்
நினைக்காண நெருங்கி வந்தேன்
என்னைப் பார்க்க மனமில்லாது ஏன் முகிலுள் மறைந்தாய்?''

பாரதியில் சிறுகதைகள் எழுதியவர்களாக. S.M ராஜு. ரகுநாதன். பாஞ்சாலி. கிரிஜா. முதலானோரை இனங்காண முடிகின்றது. இவர்களுள். S. M ராஜு எழுதிய மயங்கியதோ. வெளிச்சம். சமகாலத்தில் கு.பரா எழுதியிருந்த சிறிது வெளிச்சம் சிறுகதையை நினைவு படுத்துவது குறிப்பிடத்தக்கது. எம். எம். சாலிஹ் எழுதிய ''சதிகாரி'' வயோதிபனுக்கு வாழ்க்கைப பட்ட இளம் முஸ்லிம் பெண் ஒருத்தியின் அவலங்களை- மனப் போராட்டங்களை நுணுக்கமாக விவரிக்கின்ற புரட்சிகரமான சிறுகதையாகும். (கணவன் முடிவில் கொலை செய்யப்படுகின்றான்) அதுமட்டுமன்றி இச்சிறுகதையின் மொழி நடையும் சிறப்பானதாக விருப்பது கவனத்திற்குரியது.

(எ-டு) ''கத்தியிலிருந்து சொட்டிக்கொண்டிருக்கும் இரத்தத் துளிகளைக் கவனித் தாள். ஒவ்வொரு துளியிலும் ஒவ்வொரு காட்சிகள் நடனமாடின. முதல் துளியைப் பார்த்தாள்... கோவலனின் அழகு மார்பிலே. கண்ணகி இறுமாந்து கிடக்கிறாள். இரண்டாவது துளியைப் பார்த்தாள். அமராவதியின் கற்கண்டுக் கன்னத்தை அம்பிகாபதியின் தனிக்கரம் வருடிக் கொண்டிருக்கிறது. மூன்றாவது துளியைப்பார்த்தாள் லைலாவின் நுதலிலே மஜ்னுவின் அதரங்கள் இன்ப முத்திரையிடுகின்றன.

சிறப்பாக இதை வழங்கியவர் புரட்சிக்கமல் என்று கருத முடிகின்றது. ஏனைய சிறுகதைகள் பலவும் அன்றைய இலக்கிய சூழலுக்கேற்ப காதலைப் பொருளாகக் கொண்டுள்ளன.

இவை அனைத்தையும் விட பாரதியின் முக்கிய பங்களிப்பு சிறுகதைப் போட்டி யொன்றினை நடத்தியிருப்பதாகும். இப்போட்டிக்கு வந்த சில கதைகளும் பாரதி இதழ்களில் பிரசுரமாகியுள்ளன!

பாரதியில் வெளிவந்துள்ள கட்டுரைகள் விஞ்ஞானம் (அணு - கோ. கோணேசபிள்ளை). கலை (எ-டு : லலித கலைப் படைப்பு - மு. கணபதிப்பிள்ளை)இலக்கியம்( தலைவனைத் தொடர்வது தருமந்தானே - மயிலன்). சமூகம் (தீண்டாமையின் திருநடனம் - D.T. செல்வநாயகம்) வாழ்க்கைவரலாறு (செ.க.சிற்பியாரும் அவர் பிறப்பிடமும் - லண்டனிலிருந்து சு. வித்தியானந்தன்) ஆய்வு (பாரதியின் திறமை என்ன? - நாவற்குழியூர் நடராஜன்) எனப் பல்துறை சார்ந்தவையாகவுள்ளன. அன்றைய சூழலில் அவை




அனைத்துமே முக்கியம் பெறும் முயற்சிகளே. இன்று நோக்கும் போது இவற்றுள் பாரதிபற்றி நாவற்குழியூர் நடராஜன் எழுதிய ஆய்வுக் கட்டுரை மிகுந்த கவனத்தைப் பெறுகின்றது. ஏனெனில், பாரதிபற்றி ஈழத்தில் - சிலவேளை தமிழிலே கூட - வெளிவந்த முதல் விமர்சன ஆய்வாக அது உள்ளமையாலாகும். எவ்வாறாயினும், இன்றைய பாரதியில் ஆய்வாளரது கவனத்தைக் கோரி நிற்பது அவ்வாய்வு என்பதிலே ஐயமில்லை!

தவிர இளைஞர் பகுதி, சிறுவர் பகுதி, மங்கையர் மன்றம் ஆகிய பகுதிகளும் பாரதியில் இடம்பெற்றுள்ளன.

மொழி பெயர்ப்பு முயற்சிக ளையும் பாரதி விட்டுவைக்கவில்லை. ''கோல்டஸ்மித் ''என்பவரின் ''பட்டுவியாபாரி'' (கு.த. மூர்த்தி) என்ற நெடுங்கதை இவ்விதத்தில் முக்கியமானது.

இவ்வாறாக, மட்டக்களப்பின் - கிழக்கின் - ஈழத்தின் இலக்கியச் சஞ்சிகை வரலாற்றில் முக்கியம் பெறுகின்ற பாரதியின் மரணத்திற்கு ஏனைய சஞ்சிகைகள் போன்று பொருளாதாரமும் ஒரு காரணமாயிருக்கலாமாயினும் பத்திரிகை ஆசிரியர் குழாத்தின் ''தொழில்வயிற்'' பிரிவுகளும் முக்கிய காரணமாக இருந்துள்ளதாக அறியமுடிகின்றது.

சமகாலத்தில் கிழக்கிலிருந்து ''எரிமலை'' (திருகோணமலை), ''சேவைமணி'' (சைனாபே), உதயன்(மட்டக்களப்பு) முதலான இலக்கியச் சஞ்சிகைகளும் வெளிவந்திருப்பதாகத் தெரிகின்றது. இவை எவையும் ஆய்வுக்குடாத நிலையில் - பெறுதற்கியலாதநிலையில் - உள்ளமை விசனத்திற்குரியது!. இவை அனைத்தும் கிடைக்கும்போது அவற்றுடன் ஒப்பிடும் போது தான் பாரதிக்குரிய இடம் மேலும் அகலமும், ஆழமும் பெற முடியுமென்று கருதுகின்றேன்.

கலாநிதி. செ. யோகராசா

# கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்துவரும் கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம்

## பாடசாலையின் தோற்றம்

மட்டக்களப்பின் தெற்கே சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இவ்வித்தியாலயம் மெதடிஸ்த மிஷன் சபையினால் 14 - 02 - 1875 ஆம் ஆண்டு மெதடிஸ்த மிஷன் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. இவ்வித்தியாலயம் 01-02-1982 ஆம் ஆண்டு கிரான்குளம் சரஸ்வதி வித்தியாலயம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இப்பாடசாலை மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மண்முனைப் பற்றுக் கோட்டத்தில் அமைந்துள்ளது.

### பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள் விபரம்

1. திரு. ஞானமுத்து
2. திரு. முருகேசு
3. திரு. நாகமணி
4. திரு. வேல்முருகு
5. திரு. தம்பிராசா
6. திரு. கந்தையா
7. திரு. கிருபைரெத்தினம்
8. திருமதி. கெங்காதரன்
9. திரு. செ. தம்பிராசா :- 1970-1977
10. திரு. க. மயில்வாகனம் :- 1970-1977
11. திரு. ச. சின்னத்தம்பிப்போடி (நி.அ) :- 28-03-1991 - 14-07-1991
12. திருமதி. க. ஆறுமுகம் :- 15-07-1991 - 13-05-1993
13. திரு. கு. வன்னியசிங்கம் :- 14-05-1993 - 28-2-2003
14. திரு. ரா. சிவச்செல்வன் (நி.அ) :- 01-03-2003 - 04-01-2004
15. திரு. க. தங்கராசா :- 05-01-2004 - 15-12-2004
16. திரு. வி. சந்திரசேகரம் (நி.அ) :- 16-12-2004 - 22-03-2005
17. திரு. க. தங்கராசா :- 23-03-2005 இன்றுவரை



பாடசாலை மாணவர் எண்ணிக்கையும், ஆசிரியர் தொகையும்

இப்பாடசாலையில் தற்போது 27, மாணவர்கள் கல்வி கற்கின்றனர். அத்தோடு அதிபர் உட்பட 9 ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

இப்பாடசாலையில் கடந்த காலங்களில் தரம் ஒன்றுக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை சுமார் 40 ஆகக் காணப்பட, இத்தொகை 2006ஆம் ஆண்டு 50 ஆகவும், 2007 இல் 61 ஆகவும், 2008 இல் 76ஆகவும், உயர்ந்து சென்றது.

இவ்வாறு தரம் 1இல் அனுமதிக் கப்படும் மாணவர் எண்ணிக்கை உயர்வடைந்ததற்கு பாடசாலையின் கல்வி அபிவிருத்தியில் ஏற்பட்ட மாற்றமே காரணமாக இருந்திருக்கின்றது.
இதற்கு இப்பாடசாலையில் கட மையாற்றும் அதிபர், ஆசிரியர்கள் அர்ப்பணிப புடன் செயற்படுவதும் ஒரு காரணம் எனக் கூறலாம்.



**கல்வி அபிவிருத்தி**

இப்பாடசாலையின் அதிபராக கடமையாற்றி, தற்போது அமெரிக்காவில் வாழ்ந்து வரும் கு. வன்னியசிங்கம் அவர்கள் காலத்தில் தரம் 5 மாணவர்களுக் காக நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சையில் 05 மாணவர்கள் சித்தியடைந்திருந் தனர்.

இவரது காலத்துக்குப் பின்னர் இப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறும் மாணவர் எண்ணிக்கையில் பின்னடைவு ஏற்பட்டது. இவ்வீதம் இரண்டு, மூன்று மாணவர்களாகக் குறைவடைந்தது.

எனினும் இவ்வாண்டு (2008)இல் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 4 மாணவர்கள் சித்தியடைந்திருப்பதானது இடைக்காலத்தில் ஏற்பட்ட பின்னடைவை ஈடு செய்வதாகக் காணப்படுகிறது.

அத்தோடு சித்தியடைந்த மாணவர்களில் 3பேர் புலமைப்பரிசில் உதவிப் பணம் பெறுவதற்கு தகுதி உடையவர்கள் என்பது மகிழ்ச்சியைத் தருகிறது.

**இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்:-**

இவ்வித்தியாலயம் இணைப்பாடவிதானச் செயற் பாடுகளிலும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகிறது.

இந்தவகையில அண்மையில் கோட்ட மட்டத்தில் இடம்பெற்ற நாடகப் போட்டி யில் இப்பாடசாலை இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

அத்தோடு கோட்ட ரீதியாக இடம்பெற்ற தமிழ்மொழித் தினப் போட்டிகளில் :- இசைவும், அசைவும் போட்டியில் ச. நிசோர்த்திகா மற்றும் கட்டுரைப்போட்டியில் ப. டேஜினி ஆகியோர் முதலாம் இடங்களைப் பெற்று இவ் வித்தியாலயத்திற்குப் பெருமை சேர்த்தனர்

மேலும் கிரான்குளம் ''விழுது'' நிறுவனத்தால் கிரான்குளம் கிராமத்திலுள்ள பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட சிறுவர் நாடகப் போட்டியில் இப்பாடசாலை முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றுக்கொண்டது.

**இல்ல விளையாட்டுப் போட்டி**

இவ்வித்தியாலயத்தில் பல ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி அனைவரது கவனத்தையும் ஈர்த்ததைக் காண முடிந்தது. இதில் குறிப்பாக உடற்பயிற்சிக் கண்காட்சி பிரதம அதிதியால் வெகுவாகப் பாராட்டப்பட்டதை குறிப்பிட்டாக வேண்டும்.

இவ்வாறாக கல்விப் பணியோடு, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் இவ்வித்தியாலயம் அளப்பரிய சாதனைகளை நிகழ்த்தி வருவதை நாம் கண் கூடாகக் கண்டு கொண்டிருக்கிறோம்.

**க. கிருபாகரன்**

# செஞ்சோற்றுக் கடன் கழித்த செம்மல்கள்

நன்றி மறப்பது நன்றன்று என்பது பொய்யா மொழிப்புலவர் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கு. நன்றிமறவாத தன்மைக்கு இலக்கணமாகச் சிலர் விளங்கினர். அவர்களுள் குறிப்பாகவும் சிறப்பாவும் குறிப்பிடத்தக்கவர்கள் கர்ணனும், கும்ப கர்ணனும்.

குந்தி கன்னிப்பெண்ணாக இருந்த காலத்திலே துர்வாச முனிவருக்குப் பணிவிடை செய்யும் பாக்கியம் கிடைத்தது. அவளுடைய சேவை மனப்பான்மையைக் கண்டு மகிழ்ந்த சக்திமிக்க துர்வாச முனிவர் குந்திதேவிக்கு அற்புத மந்திரம் ஒன்றை உபதேசித்தார்.

("குந்திதேவி! நீ யாராவது ஒரு தேவனை மனதில் நினைத்தபடி, நான் உபதேசித்த மந்திரத்தை உச்சரித்தால் அத்தேவன் அருளால் உனக்குக் குழந்தை கிடைக்கும் என்று கூறிவிட்டுச் சென்றார் துர்வாச முனிவர்.)

ஒரு நாள் இளவரசி குந்திதேவி பூந்தோட்டத்திலே விளையாடிக் கொண்டிருந்தபோது சூரியனைப் பார்த்தாள். முனிவர் உபதேசித்த மந்திரத்தைப் பரீட்சித்துப்பார்க்க விரும்பினாள். சூரிய பகவானை மனதிலே நினைத்தபடி அந்த அற்புத மந்திரத்தை உச்சரித்தாள். அடுத்தகணம்!

அவளுடைய கைகளிலே கவச குண்டலங்களுடன் அழகிய ஆண் குழந்தை ஒன்று காட்சியளித்தது. குந்திதேவி பயந்துவிட்டாள். அவளுடைய உடல் நடுங்க ஆரம்பித்துவிட்டது. தோழிப்பெண்களும் அச்சமடைந்தனர்.

கலியாணமாகாத கன்னிப் பெண்ணாணதனது கையிலே குழந்தை இருப்பதைக்கண்டால் அவதூறாகப் பேசுவார்களே என்று அஞ்சினாள். குந்திதேவி, அக்குழந்தையை ஒரு பேழையிலே வைத்து தோழிகளின் உதவியுடன் அதனைக் கங்காநதியிலே மிதந்து செல்லவிட்டாள்.

துரியோதனனின் தந்தையான திருதராட்டிதனின் தேரோட்டி அதிரதனின் கையில் அந்தப் பேழை அகப்படுகிறது. பேழையில் காணப்பட்ட குழந்தைக்கு கர்ணன் என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தான். "தேரோட்டி மகன்" என்றே சிலர் கர்ணனை அழைத்தனர்.

கர்ணனின் வீரதீரச்செயல்களை அவதானித்த நண்பன் துரியோதனன் கர்ணனுக்கு முடிசூட்டி அங்கதேசத்துக்கு அரசனாக்குகிறான்.

மகாபாரதப்போர் நடைபெறப் போவதை அறிந்த குந்திதேவி, கண்ணபிரானைச் சந்தித்து பஞ்ச பாண்டவர்களைப் பாதுகாக்கும்படி வேண்டுகின்றாள். குந்திதேவியின் மூத்த மகன் கர்ணன் தான் என்ற உண்மையை அவளுக்கு உணர்த்தி அவனைச்சந்தித்து எப்படியாவது பஞ்ச பாண்டவர் பக்கத்துக்கு அவனை அழைத்து வரும்படி கண்ணபிரான் கூறுகிறார்.

குந்திதேவி கர்ணனைச் சந்தித்து தான்தான் அவனைப் பெற்ற தாய்

என்பதை நிரூபிக்கிறாள். 'மகனே கர்ணா! கொடியவனான துரியோதனனின் பக்கத்தை விடுத்து உன் தம்பிமாரான பஞ்ச பாண்டவர் பக்கம் வந்து சேர்ந்து விடு. அவர்கள் உன்னைத் தங்கள் தலைவனாக ஏற்றுக் கொள்வார்கள்...." என்று அன்போடு கூறினாள்.

தாயே! தயவு செய்து என்னை மன்னிக்க வேண்டும். தேரோட்டி மகனே என்று பலர் என்னைக் கிண்டல் செய்த வேளையிலே, எனக்கு முடி சூட்டி அங்க தேசத்துக்கு என்னை அரசனாக்கிப் பெருமைப் படுத்தியவன் துரியோதனன்.

"துரியோதனனுடைய உணவை உண்டு. வளர்ந்தவன் நான். அவன் செய்த நன்மைகளை எல்லாம் மறந்து அவனுடைய எதிரிகளின் பக்கம் சேரமுடியாது தாயே..... போர்க்களம் சென்று அவனுக்காகப் போர் புரிந்து செஞ்சோற்றுக்கடன் தீர்த்து எனது உயிரைத் தியாகம் செய்ய விரும்புகிறேன்." என்றான் நன்றி மறவாத உள்ளம் படைத்த கர்ணன்.



துரியோதனனுக்காகவே போர்க்களத்தில் தன்னுடைய இன்னுயிரைத் தியாகம் செய்தான் உத்தமன் கர்ணன்.

**கும்பகர்ணன்**

இலங்கை வேந்தன் இராவணனின் தம்பி கும்பகர்ணன், நன்றி உணர்வை தனது உயிரிலும் மேலாக மதித்தவன் அவன்.

கும்பகர்ணன் தவம் செய்த காலத்திலே இறைவனிடம் 'நித்தியவரம்-சாகாவரம் வேண்டும்'' என்று கேட்பதற்குப் பதிலாக நாக்குத் தடக்கி, ''நித்திரைவரம்'' வேண்டும் என கேட்டதால் தனது வாழ்வில் பெரும் பகுதியை நித்திரையில் கழித்தவன்.

இராமனுக்கும் இராவணனுக்கும் யுத்தம் நடைபெறவிருந்த வேளையிலே, அண்ணனுடன் அபிப்பிராய பேதங்கொண்டு இராவணனுடைய இளைய தம்பி விபீஷணன் இராமனிடம் சரணடைந்து விட்டான். கும்பகர்ணனையும். இராமனுடைய பக்கத்தில் சேர்ந்துவிட முயன்றான் விபீஷணன்.

விபீஷணன் கும்பகர்ணனை சந்தித்து ''அண்ணா'' அதர்மச் செயல்புரியும் அண்ணன் இராவணனுடைய பக்கத்தில் நீ நின்றால் உயிர்தப்ப முடியாது. தர்ம மூர்த்தியான இராமனுடைய பக்கத்துக்கு வந்துவிடு. எனக்கு அடைக்கலம் தந்த இராமச்சந்திரன் உனக்கும் அடைக்கலம் தருவான்.

"இலங்கை வேந்தன் இராம பாணத்துக்கு இரையாவான் என்பது நிச்சயம். நீ இராமன். பக்கத்தில் சேர்ந்தால், இராவணன் இறந்த பின்பு இலங்கைக்கு நீ அரசனாகலாம்'' என்றான்.

"தம்பி விபீஷணா! நான் அண்ணன் இராவணனின் சோற்றை உண்டு வளர்ந்தவன். அவனே என்னை வீரனாக இந்த நிலைக்கு வளர்த்து விட்டவன் அண்ணனுக்கு அபாயம் ஏற்படும் வேளையில் எதிரியின் பக்கம் நான் சேர்வேனா?''

''செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் பொருட்டு போர்க்களம் சென்று அண்ணனுக்காக எனது உயிரைத் தியாகம் செய்வேன் என்றான் நன்றி உள்ளம் படைத்த கும்பகர்ணன். போர்க்களத்திலே தனது அண்ணனுக்காகத் தன்னுயிரை இராமபாணத்துக்குப் பலி கொடுத்தான் கும்பகர்ணன்.

நன்றி மறவாத தன்மையிலே கர்ணனும், கும்பகர்ணனும் தலை சிறந்து விளங்கினர் என்றால் அது மிகையாகாது.

மாஸ்டர் **சிவலிங்கம்.**

மட்டுநகரில்........




SPOKEN ENGLISH

பாடசாலை மாணவர்களுக்கான நாடகமும் அரங்கியலும்

தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம், விஞ்ஞானம், விவசாயம்

போன்ற பாடங்களுக்கான வினாவிடைகள்


- சிறுவர்களுக்கான.... கதைப் புத்தகங்கள்
- தெனாலிராமன் கதைகள்
- பரமார்த்தகுரு கதைகள்
- பகவத்கீதை
- சமையலறைக் குறிப்புக்கள்
- சமயம் சம்பந்தமான புத்தகங்கள்
- பரிசுப்பொருட்கள்



போன்றவற்றை ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து கொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்.

அகரம் புத்தகசாலை



82 பார் வீதி

மட்டக்களப்பு.

AD/0006

# யேசு பிரானே நீர் மீண்டும் மண்ணுலகம் வருவதெப்போ?



யேசு பிறப்பின் இனிய பொன்னாளாம்
கிறிஸ்மஸ் பெருவிழா
உலகிற்கெல்லாம் சொல்வதென்ன?
''உன்னைப்போல் பிறரை நேசி
உன் அயலானை அன்பு செய்



என்கின்ற பொன்மொழிகள்,
எம் இதயத்தில் நிறைந்துவரும்,
யேசு பிரானே நீர் எமக்காகப் பிறந்து
எமக்காக மரித்துப் போனாய்.
ஆனால் இன்று மாந்தர் மனதில்
மனிதத்துவம் மரித்துப்போய் விட்டதய்யா
மாந்தர் மனங்களில் மீண்டும் உதயமாக,
விண்ணேகிய பிதாமைந்தனே,
நீர் மீண்டும் மண்ணுலகம் வருவதெப்போ?"




நத்தார்ப் பெருவிழாவில்
நாமெல்லாம் ஒன்றுகூடி
உற்றார் உறவினர் இனிய மொழிபேச
பெற்றோர் மூத்தோர் ஆசிபெற்று
குதூகலித்து உணவுண்டு
கூடிக்குலாவியிருந்தோம் ஒருகாலம்
இன்றோ எம் மக்கள் அகதி முகாம்களிலும்,



நிழல் தரு மரங்களின் கீழ்,
இனிய உறவுகளையும் , ஊர்களையும் நினைத்து
நத்தார்ப் பெருவிழாவில்
நமக்கெல்லாம் விடிவு வராதா,
என்று ஏங்கும் இதயங்கள் இந்தக்காலம்
எம் மக்களின் துயர் துடைத்து
நல்லோரைக் காத்து தீயோரை அழித்திட
பிதாமகனே நீர் மீண்டும் பூமியில் பிறப்பதெப்போ?




திரு. சீ. சங்கர்
ஆசிரியர்
மட்/ கல்லடி முகத்துவாரம்
விபுலாநந்தா வித்தியாலயம்.





ஆண், பெண் இருபாலாருக்கும்
சகலவிதமான சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
வீதி ஒழுங்கு மற்றும் இயந்திரவியல் பற்றிய பாடங்கள்
தரமான ஆசிரியர்கள் மூலம் ஒழுங்கு முறையில்
இலவசமாகக் கற்றுக்கொடுக்கப்படும்.



VEHICLE HIRE
திருமண வைபவங்களுக்கு
கார் மற்றும்
சொகுசு பஸ் வழங்கப்படும்

# IYNGARAN LEARNERS

No. 61, Station Cross Road,
Batticaloa.
Tel : 060-265 0608
Mobile : 077 313 8372


மட்டுநகரில் சிறந்ததோர் உணவகம்
நளபாகம் உணவகம்!
சாப்பாட்டு வகைகள்
Fried Rice
புரியாணி
தோசை
நூடுல்ஸ்
இட்லி
பிட்டு
இடியப்பம்
பூரி
சிற்றுண்டிகள்
குளிர்பானங்கள்
ஐஸ்கிறீம்
கொத்துறொட்டி
முட்டை றொட்டி
பறோட்டா
சப்பாத்தி
மற்றும் இறால், கணவாய், நண்டு
நெத்தலி போன்ற Bites வகைகள் சூடாகவும், சுவையாகவும் கிடைக்கும்.
அத்தோடு அனைத்து வைபவங்களுக்கும் ஏற்ற ஓடர்களை குறித்த நேரத்தில்
பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.
நளபாகம் உணவகம்
28, லொயிட்ஸ் அவனியு
மட்டக்களப்பு.
தொ.பே: 065-4900037 065-2227623